உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-177

ஜூன் 1-15 2024



வராகி அம்மனை மஞ்சளில் பிடித்து வழிபடலாம்

e-magazine

e-magazine

## திருமண தடையா?

## ஆண், பெண் இருபாலருக்கும் உடனடி பலன் தரும் வழிமுறை

e-magazine

# கர்ணன் கற்றது வித்தை அல்ல வேதம்

வீரத்துக்குக் குறைச்சல் இல்லை. இருந்தாலும் குரு வேண்டுமே?

துரோணாச்சாரியார் மறுத்துவிட, கிருபாச்சாரியாரிடம் ஒரு நாள் அதிகாலை போகிறான் கர்ணன்.

மாணவர்களின் திறமையை சோதிக்க, வானத்தில் பறக்கும் ஒரு பறவையை குறிபார்த்து வீழ்த்தச் சொல்கிறார் குரு...

அர்ஜுனன் ஒரே அம்பில் பறவையை வீழ்த்திவிட்டு தேரேறிப் போய்விட்டான்...

இப்போது கர்ணனின் முறை.

அம்பை நாணில் பூட்டியாயிற்று...

ஒரு கணம் பறவையை வானில் குறி பார்த்தவன் வில்லையும் அம்பையும் கீழே வைத்து விட்டான்.

மிகச் சிறந்த வில் வீரனான கர்ணன் அப்படிச் செய்தது குருவுக்கு அதிசயம்...

ஏன் வில்லையும் அம்பையும் கீழே வைத்து விட்டாய் கர்ணா என்று காரணம் கேட்கிறார்.

கர்ணன் மிகவும் பணிவுடன்

“குருவே இது மிகவும் அதிகாலை நேரம்...

இந்த நேரத்தில் ஒரு பறவை விண்ணில் பறக்கிறது என்றால் நிச்சயம் தன் குஞ்சுகளுக்கான உணவைக் கொண்டு போகிறது என்றுதான் பொருள்...

இப்போது திறமைக்காக அதைக் கொன்றுவிட்டால் நான் வீரனாவேன்.

ஆனால், அந்த இளம் குஞ்சுகள் அனாதை ஆகிவிடும். எனவே நான் கொல்ல மாட்டேன்” என்றான் கர்ணன்.

கர்ணனின் பதிலைக் கேட்டு கலங்கிப்போன குரு சொன்னாராம்,

“கர்ணா நீ கற்றது வித்தை அல்ல வேதம்”

**பணம் பதவி அதிகாரத்தின் மூலம் இன்று நீ பலவானாக இருக்கலாம்? நாளை...?**

ஒருவனுக்கு பதவியும் அதிகாரமும் இருக்கும்போது அவன் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை கர்ணனின் இந்த பதிலில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

பணத்தாலும், பதவியாலும், அதிகாரத்தாலும் நீங்கள் பலமானவர்களாக இருக்கலாம்.

அந்த பலத்தை உன்னை நேசிப்பவர்களிடமோ, அல்லது உன்னை விட பலம் குறைந்தவர்களிடமோ காட்டக்கூடாது.

எவ்வளவு பெரிய நீதி...

இன்றைய உலகிற்கு அவசியம் தேவையான ஒரு செய்தி, அதை கர்ணன் அன்றே தனது செயலின் மூலம் கூறியுள்ளான்.

இன்று நீ பலவானாக இருக்கலாம் நாளை என்னவாகும் என்பதை படைத்தவன் மட்டுமே அறிவான்.



ஆன்மிகமலர்
e-magazine
aanmeegamalar.com

# வருடத்தில் 28நாட்கள் மட்டுமே திறக்கப்படும்




# கொட்டியூர் மகா க்ஷேத்திரம்!

கேரளத்தின் கண்ணூர் மாவட்டத்தில்கண்ணூர் வயநாடு நெடுஞ்சாலையிலிருந்து உட்புறமாக அடர்ந்த காடுகளுக்கிடையே அமைந்துள்ளது கொட்டியூர் மகா க்ஷேத்திரம்.

கேரள மாநிலம் கண்ணனூரில் இருந்து 70 கிலோமீட்டர் தொலைவிலும், தலச்சேரி எனும் ஊரிலிருந்து 60 கிலோமீட்டர் தொலைவிலும் இருக்கும் கொட்டியூருக்கு வைகாசிப் பெருவிழாக் காலத்தில் அதிக அளவில் பேருந்து வசதிகள் செய்யப்பட்டிருக்கும்.

வைகாச மகோற்ஸவம் நடைபெறும் நாள் களில் சுமார் 50 லட்சத்துக்கும் மேலான பக்தர் கள் கேரளத்தின் வடபகுதியில் இருந்து இந்தக் கோயிலுக்கு வருகை தருகின்றனர். மற்றபடி இந்தக் கோயில் இருப்பதே அவ்வளவாக வெளி யில் தெரியவில்லை.

தட்ச யாகம் நடந்த இடமாக நம்பப்படும் இந்தக் கோயிலை வருஷத்தில் வெறும் 28 நாள்கள் மட்டுமே திறக்கிறார்கள். தற்போது இந்த திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சிவபெருமானை மதிக்காமல் தட்சன் செய்த யாகத்தை அழித்து அவன் தலையைக்கொய்த சிவபெருமான் சினம் தணிந்த நிலையில் சுயம்புவாக எழுந்தருளிய தலம் இது.

சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மூவரும் கூடிய தலம் என்பதால் கூடியூர் என்று அழைக் கப்பட்டு, காலப்போக்கில் கொட்டியூர் என்று ஆகிவிட்டதாகச் சொல்கிறார்கள்.

கொட்டியூரைச் சூழ்ந்துள்ள பல ஊர்களும் தட்ச யாகம் தொடர்புடையதாகவே அமைந்திருக் கின்றன. தட்ச யாகத்துக்கு வந்த பார்வதி தேவி, யாகம் நடந்த இடத்தை, தொலைவில் இருந்தே பார்த்த ஊர் `நீண்டு நோக்கி' என்றும், பயணக் களைப்பால் சோர்வுற்ற தேவியின் நடை வேகம் தணிந்த இடம் `மந்தன்சேரி' என்றும், வழியில் அவள் பால் காய்ச்சிய மலை `பாலுகாச்சி மலை'

e-magazine
aanmeegamalar.com









என்றும், தட்சனின் தலையை வெட்டிய பிறகு சிவபெருமான் வாளை வீசிய இடம் `முதிரேரிக் காவு' என்றும் அழைக்கப்படுகின்றன.

கொட்டியூரில் ஓடும் மாவேலிப்புழை எனப்படும், பாவலி ஆற்றின் இரண்டு கரைகளிலும் சிவபெருமானுக்கு இரண்டு கோவில்கள்அமைந் திருக்கின்றன. இக்கரையில் அமைந்த கோவிலை இக்கரைக் கொட்டியூர் என்றும், அடுத்த கரையில் அமைந்த கோவிலை அக்கரைக் கொட்டியூர் என்றும் அழைக்கின்றனர்.

இக்கரைக் கோவில், சற்று உயரத்தில் இருக் கிறது. மிகப் பழமையான இக்கோவிலுக்குச் செல லப் பல படிகள் ஏற வேண்டும். இங்கு இரண்டு சிலைகள் இருக்கின்றன. இடப்பக்கம் உள்ள சிலையைப் பார்வதி தேவியாகவும், வலப்பக்கம் உள்ள சிலையைச் சிவனாகவும் வழிபடுகின்றனர்.

அக்கரைக் கோவிலானது, அரை அடி தண்ணீர் நிரம்பியுள்ள ஒரு குளமும், அதனுள் கருங்கல்லால் ஆன நான்கைந்து மேடைகளும் இருக்கின்றன. அந்தக் குளத்திற்கு 'திருவஞ் சிற' என்று பெயர். இந்த இடம், தட்சன் நடத்திய வேள்வியில் வேள்விக் குண்டமாக இருந்ததாகக் கருதப்படுகிறது.

குளத்தின் தென்கரையில் உள்ள பகுதியில், விழாவின் போது மூன்று பந்தல்கள் போட்டு, ஒன்றை ஆபரண அறையாகவும், மற்றொன்றை வாள் வைக்கும் அறையாகவும், மூன்றாவதை மடப்பள்ளியாகவும் பயன்படுத்துகின்றனர்.

அங்குள்ள முக்கியமான மேடைக்கு 'மணித் துறை' என்று பெயர். அதில் 'கொட்டியூர் பெருமாள்' என்று அழைக்கப்படும் மகாதேவர் சுயம்பு லிங்கமாய் ஒரு பள்ளத்தில் எழுந்தருளிருக்கிறார். அங்கிருந்து சிறிது தூரம் தள்ளி தாட்சாயணி அக்னிப்பிரவேசம் செய்து மறைந்த இடம் என்று சொல்லப்படும் மேடை ஒன்றிருக்கிறது. அதனை 'அம்மாறக்கல்' என்று சொல்கின்றனர்.

கேரள நாட்காட்டியின்படி இடபம் (வைகாசி) மாதம், சுவாதி நட்சத்திர நாளன்று தொடங்கி மிதுனம் (ஆனி) மாதம் சுவாதி நட்சத்திரம் வரை மொத்தம் 28 நாட்கள் அக்கரைக் கொட்டியூரில் வைகாசிப் பெருவிழா (வைகாச மகோற்ஸவம்) நடைபெறும். இந்த நாட்களில் மட்டுமே ஆலயம் திறந்திருக்கும்.

மற்ற நாட்களில் வழிபாடு நடைபெறுவதில்லை. அக்கரைக் கொட்டியூரில் விழா நடைபெறும் நாட்களில் இக்கரைக் கொட்டியூரில் வழிபாடுகள் நடத்தப்படுவதில்லை. மற்ற நாட்களில் அங்கு தினசரி வழிபாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அக்கரைக் கொட்டியூரில் கட்டிடங்கள் எதுவும் இல்லை. திருவிழா நடைபெறும் நாட்களில் மட்டுமே 'கையாலா' எனப்படும் சிறு குடிசைகள் அமைக்கப்பட்டுப் பக்தர்கள் தங்குகின்றனர்.

வைகாசிப் பெரு விழாவின் போது 'மணித்துறை' எனுமிடத்தில் பந்தல் போட்டு தற்காலிகக் கருவறையை அமைக்கிறார்கள்.

சிவபெருமான், தட்சனைக் கொன்ற வாளை அங்கிருந்து வீசியெறிய அது 35 கிலோமீட்டர் தொலைவிலுள்ள 'முதிரேரிகாவு' எனுமிடத்தில் விழுந்ததாக சொல்கிறார்கள். இந்த நிகழ்வை நினைவுபடுத்தும் வகையில் முதிரேரிகாவில் இருந்து வாளை இக்கோவிலுக்கு எடுத்து வரும் 'வாள்எழுநலத்து' எனும் விழா முதன்மையானதாக இருக்கிறது.

தட்ச யாகம் நடைபெற்ற காலத்துக்குப் பின்பு காலப்போக்கில் கவனிப்பார் இல்லாமல் போன இந்த இடத்தை சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு குறிச்சியார் என்ற ஆதிவாசிகளே கண்டு பிடித்தனர். எனவே, முதல்முறையாகப் பூஜை செய்யும் நம்பூதிரி பிராமணர்கள் குறிச்சியார்களின் அனுமதியில்லாமல் கோயிலுக்குச் செல்ல முடியாது. இன்றைக்கும் இந்த நடைமுறை உள்ளது.

அக்கரைக் கொட்டியூரில் நடைபெறும் மகோற்ஸவத்தை 64 சாதிகளைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகச் சேர்ந்துதான் செய்கிறார்கள். இந்த 64 சாதிகளைச் சேர்ந்தவர்களை மலையாளத்தில் 'அவகாசிகள்' என்கிறார்கள். இந்த அவகாசிகள் அனைவரும் ஒன்றாகக்கூடும் கூட்டத்தை, 'மகா அடியேந்திர யோகம்' என அழைக்கிறார்கள்.

கேரளத்தின் மூலைமுடுக்கில் எல்லாம் வாழும் இந்த 64 சாதியினரும் எப்போதும் ஒன்றாகச்சேர முடியாது என்பதால், மிக முக்கியமான 14 சாதிகளைச் சேர்ந்த அவகாசிகள் பங்கெடுக்கும் யோகத்தை 'அடியேந்திர யோகம்' என அழைக்கிறார்கள். மகா அடியேந்திர யோகமோ, அடியேந்திர யோகமோ நடைபெறாமல்,கோயில் தொடர்பான எந்த ஒரு முடிவையும் எடுக்க முடியாது.

அக்கரைக் கொட்டியூரில் திருவிழா நடைபெறும் காலங்களில் மட்டுமே 'கையாலா' என்று அழைக்கப்படும் சிறு குடிசைகளை அமைத்துக் கொண்டு அனைத்து பக்தர்களும் தங்குகிறார்கள். மற்றபடி கட்டடங்கள் எதுவும் இல்லை. அதேபோல் திருவிழா நடைபெறும் நாள்களில் மட்டும்தான் சிவபெருமானின் சுயம்பு லிங்கத்தைச் சுற்றி குடிசை அமைக்கப்படுகிறது. மற்ற நாள்களில் வெட்டவெளியில்தான் காட்சி தருகிறார் சிவபெருமான்.

பக்தர்கள் சிவலிங்கத்தை வழிபடும் இடம் 'திருவஞ்சரா' என்று அழைக்கப்படுகிறது. இந்த இடத்தில் எப்போதும் தண்ணீர் சூழ்ந்திருக்கும். இந்த நீர், தட்சனின் ரத்தம் என்பதாக ஐதீகம்.

இந்தக் கோயிலின் பூஜை முறைகளை, அனைத்து சாதியினரையும் ஒருங்கிணைத்து ஆதிசங்கரர்தான் வடிவமைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். திருவிழா காலங்களில் மட்டும் அக்கரையிலிருந்து சிவ பார்வதி சிலைகளை இங்கு எடுத்து வந்து பூஜை செய்கிறார்கள்.

கோயிலுக்கு அருகில் 'தட்சிண கங்கை' என்று சிறப்பித்துச் சொல்லப்படும் பாவலி ஆறு ஓடுகிறது. பாலுகாச்சி மலையில் உற்பத்தியாகிப் பாய்ந்துவரும் இந்த ஆற்றில் உள்ள கற்கள் அனைத்தையும் சிவலிங்கமாகப் பாவித்து வழி படுகின்றனர். இந்த ஆற்றில் குளித்துவிட்டு; ஆற்றில் உள்ள இரண்டு கற்களை எடுத்துத் தேய்த்தால் சந்தனம் போல கிடைக்கும் இதுவே இங்கு சிவச்சின்னமாகும்.

கொட்டியூருக்குச் சொந்தமான கோடிக்கணக்கான விலை மதிப்புள்ள ஆபரணங்களை, கொட்டியூரிலிருந்து சுமார் 7 கி.மீ தொலைவில் உள்ள 'கரிம்பனக்கல் கோபுரம்' என்னும் சிறிய கட்டடத்தில் வைத்து பாதுகாத்து வருகிறார்கள்.

இந்த அறைக்குப் போடப்பட்டிருக்கும் நூறாண்டு பழைமையான பூட்டின் சாவிகளில் நான்கு சாவிகள் கொட்டியூரைச் சேர்ந்த நான்கு பிரமுகர்களிடமும், ஐந்தாவது சாவி மணாளன் என்பவரும் வைத்திருப்பார். ஐவரும் வந்து திறந்தால்தான் பூட்டு திறக்கும். மேலும், இந்த இடத்தை விஷப்பாம்புகள் காவல் காப்பதாக நம்பிக்கை நிலவுகிறது.

சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு கேரளத்தின் கைதேர்ந்த திருடர்கள் பலர் ஒன்றிணைந்து, நகைகளைத் திருட முயற்சி செய்தார்களாம். ஆனால் அவர்களால் கரிம்பனக்கல் கட்டடம் இருந்த இடத்தைக்கூட நெருங்கவே முடியவில்லையாம். ஏதோ ஒரு சக்தி அவர்களைத் துரத்தியடித்ததாகத் திருடர்களின் ஒருவனான ஸ்டீபன் என்பவன் வாக்குமூலம் கொடுத்தானாம்.

திருவிழாவின் இரண்டாவது நாள் 64 கலசங்களில் இந்த ஆபரணங்களை எடுத்துச் செல்வார்கள். இந்தக் கலசங்களை 'பண்ணாரம்' என்றும், கொட்டியூருக்கு எடுத்துச் செல்லும் வைபவத்தை, 'பண்ணாரம் எழுந் நலத்து' என்றும் அழைக்கிறார்கள். இந்தச் சடங்கைச் செய்பவர்களைக் 'குடிபதிகள்' என்பார்கள்.

சிவபெருமான், தட்சனின் தலையைத் துண்டித்ததன் நினைவாக 'ஓடப்பூ' என்று ஒரு பூ வைகாசிப் பெருவிழாக் காலத்தில் விற்பனை செய்யப்படுகிறது. இந்தப் பூவை 'தட்சனின் தாடி' என்று அழைக்கிறார்கள். இந்தப் பூவை வீட்டில் வாங்கி வைத்திருந்தால் அனைத்து செல்வங்களும் பெருகும் என்பது நம்பிக்கை.


e-magazine aanmeegamalar.com

# ஆகாசமார்க்கமாக வரும் சமயபுரம் மாரியம்மன்

## நோய் தீர்க்கும் ஆகாசமாரியம்மன்

கும்பகோணம்பூந்தோட்டம் சாலையில் 10கிமீ தொலைவில் உள்ளது. நாச்சியார் கோயில், இங்கு உள்ள ஆகாசமாரியம்மன் கோயில், திருநறையூர் சித்தீச்சுரம் என்ற பாடல் பெற்ற ஸ்தலமாக உள்ளது.

இங்கு வீற்றிருக்கும் அம்மன் சமயபுரம் மாரியம்மனின் இன்னொரு உருவமாகவேபோற்றப் படுகிறார்.

முற்காலத்தில் கவரைச் செட்டியார். குலத்தோர் வளையல் வியாபாரத்திற்கு பல ஊர்களுக்கு செல்வது வழக்கம், அப்படி ஒருசமயம், சமயபுரம் சென்ற போது இரவு நேரமானதால், ஓர் கோவில் மண்டபத்தில் தங்கியுள்ளனர்,

அப்போது பெரியவர் ஒருவரின் கனவில் சமயபுர மாரியம்மன் இளம் பெண் வடிவத்தில் தோன்றி தனது கைகளுக்கு வளையல் அணிவிக்க கூறினார்.

பெரியவரும் வளையல்களை அணிவிக்கும் போது அந்த இளம் பெண்ணின் கைகளுக்கு பொருந்துவதாக வளையல்கள் இல்லை, கைக ளுக்கு ஏற்ப வளையல்களை தேடி அணிவிக்கும் போது, கைகளுக்கு பொருந்தாத பல வளையல்கள் உடைந்து போயின, இதனால் வருத்தமடைந்த அந்த பெரியவர்.

“அம்மா உன் அழகிய கைகளுக்கு போட வளையல்கள் என்னிடம் இப்போது இல்லை. என் ஊருக்கு வந்தால் வகை, வகையாக வளையல் களை அணிவிக்கிறேன் என்று கூறியுள்ளார்.

திடீரென கனவு கலைந்து எழுந்தவருக்கு அதிர்ச்சி, கனவில் இளம் பெண் கைக்கு பொருந்தாத வளையல்கள் உடைந்த சிதறல்கள் நிஜத்திலும் உடைந்து இருந்ததை பார்த்து வியந்தார்.

அதே சமயம் தனது கூட வந்த கூட்டாளிகளுக்கு அம்மை நோய் பீடித்திருந்தது. இதைப் பார்த்து வந்தோர்



அதிர்ச்சி யுற்ற போது, கோவில் அர்ச்சகர் ஒருவர் பொன் காசுகளுடன், விபூதியையும் ஏந் தியவாறு அந்த முதியவரிடம் வந்து அம்பாள் உடைந்த வளையல்களுக்கு பொற் காசுகள் கொடுக்க சொல்லி உத்தரவிட்டாள் என்று கூறி முதிய வரிடம் பொற்காசுகளை கொடுத்தார்.

மேலும் அம்மை நோய் பீடித்தவர்களுக்கு அம்பாளின் விபூதியை பூசிவிடுமாறு கூறி விபூதியையும் கொடுத்தார், அம்பாளின் விபூதி பூசியவர்களின் அம்மை நோய் மறைந்தது.


பெரியவருக்கு கனவில் அம்பாளே காட்சி கொடுத்த விஷயத்தை கேள்விப்பட்டு, உடன் வந்தோர், மனமுருகி தங்களுக்கும் காட்சி தரவேண்டும் என்று அம்பாளை வேண்டினர், அப்போது ‘‘தான் முல்லைக்கும், மல்லிகைக்கும், முன்கை வளையலுக்கும் ஆண்டுதோறும் வந் தருள்வேன்’’ என்றாள்.

அம்மனின் வாக்குபடி வைகாசி அமா வாசைக்கு அடுத்த வெள்ளியன்று ஆகாச மார்க் கமாய் திருநறையூருக்கு வந்து அம்மன் அருள் பாலித்தார்.

இதன்படி ஆண்டுதோறும் வைகாசி மாதம் அமாவாசைக்குப்பின் வரும் வெள்ளிக்கிழமை இரவில் சமயபுரத்தில் இருந்து ஆகாச மார்க்கமாக நறையூர் என்ற நாச்சியார்கோவிலுக்கு அம்பாள் வந்து காட்சி தருவதாக ஐதீகம். இன்றும் இந்த நிகழ்வு வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வரு கிறது.

மேலும் இந்த அம்மனை நோய் தீர்க்கும் மாரி யம்மனாகவும் வழிபட்டு வருகின்றனர்.

நிறைமங்கல நாயகியாக குறைதீர்க்கும் தெய்வமாய் அரசாட்சிக் கோலம் கொண்ட அன்னை, தன்னை அண்டி வரும் பக்தர்களுக்கு எல்லா பரம்பொருளும் தன்னுள் அடக்கம் எனக் காட்ட, திருவிழா சமயத்தில் ஒவ்வொரு இரவிலும் ஒவ்வொரு அலங்காரத்தை ஏற்று காட்சி அளிக்கிறார்.



திருவிழாவின் போது, அன்னை ராஜ ராஜேஸ்வரி அலங்காரத்துக்கு வெண்பட்டு சேலை பிரத்யேகமாக தயாரிக்கப்படுகிறது. அன்று இரவு அன்னையின் அருட்திறம் காட்டும் வகையில் நீரில் விளக்கு எரிதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்நிகழ்வின் பின் பக்தர்களுக்கு ஆசி வழங்கி, அவர்களின் பாவங்களை களைந்து, உடல் உபாதைகளுக்கு நிவாரணம் அளித்து, தீராத வினைகள் தீர்த்து சகல பாக்கியங்களையும் அருளுகிறார்.

நாச்சியார்கோவில் ஆகாசமாரியம்மன் கோவிலில் சாம்பிராணி புகையிட்டு பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தி, பலவகை காவடிகள் எடுத்து அங்கப்பிரதட்சணம், மாவிளக்கிடல் என பல வகை வழிபாடுகளை செய்கிறார்கள். சமயபுரம் மகா மாரியம்மன் நாச்சியார் கோவிலுக்கு வந்த வசந்த விழா காண வரும் நாட்களில் வேறு எந்த விழாவையும் அவ் வூரில் மக்கள் நடத்துவது இல்லை. பூஜை நேரம்: காலை 6 மணி முதல் 10 மணி வரை, மாலை 5 மணி முதல் 8 மணி வரை.



aanmeegamalar.com e-magazine

# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

தொடர்பு எண்: 9444228203
இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com



# விநாயகரை மட்டுமல்ல வராகி அம்மனையும் மஞ்சளில் பிடித்து வழிபடலாம்



பொதுவாக விநாயகரை மஞ்சளில் பிடித்து வைத்து வழிபடும் வழக்கம் உள்ளது.

ஆனால் விநாயகரைப் போன்றே வராகி தேவியையும் மஞ்சளில் பிடித்து வைத்து வழிபடும் முறை ஒன்று இருக்கிறது.

மனிதர்கள் துன்பம் துயரம், கஷ்டங்கள் தீரவேண்டுமென்றே இறைவனை வழிபடுவார்கள். அந்த வகையில் கஷ்டங்கள் பல வகைப்படும்.

பண கஷ்டம், தொழில் கஷ்டம், மன கஷ்டம், குடும்பத்தில் இருக்கும் நபர்களால் ஏற்படக்கூடிய கஷ்டம், உறவினர்களால் ஏற்படக்கூடிய கஷ்டம், பிள்ளைகளால் ஏற்படக்கூடிய கஷ்டம், வேலையில் கஷ்டம், படிப்பில் கஷ்டம் என்று பல வகைகளில் அனைத்திலும் கஷ்டம் என்பது இருக்கத்தான் செய்யும்.

அந்த கஷ்டங்களை நம்முடைய கடின உழைப்பாலும் முயற்சியாலும் சரி செய்து கொள்ள வேண்டும். அப்படி முயற்சி செய்தும் நம்மால் அந்த கஷ்டத்தில் இருந்து வெளியில் வர முடியவில்லை என்றால் தெய்வத்தை நாட வேண்டும். அப்படி நம்முடைய கஷ்டத்தை தீர்க்கக் கூடிய அற்புதமான தெய்வமாக திகழ்பவள் வராகித்தாய்.

இந்த வழிபாட்டை என்றைக்கு வேண்டுமானாலும் நாம் ஆரம்பிக்கலாம். தொடர்ந்து 12 நாட்கள் இந்த வழிபாட்டை செய்ய வேண்டும். காலையில் பிரம்ம முகூர்த்த வேளையில் செய்யலாம். அல்லது மாலை



ஆறுமணியிலிருந்து ஒன்பது மணிக்குள் செய்யலாம். முதல் நாள் எந்த நேரத்தில் இந்த வழிபாட்டை ஆரம்பிக்கிறோமோ அதே நேரத்தில் தான் தொடர்ந்து 12 நாட்களும் செய்ய வேண்டும்.

வீட்டு பூஜை அறையில் வராகி அம்மன் படம் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி படம் இருக்கும் பட்சத்தில் படத்தை துடைத்து சந்தனம் குங்குமம் வைத்துக் கொள்ளுங்கள். படம் இல்லை என்றாலும் பரவாயில்லை. இப்பொழுது ஒரு சிறிய தாம்பாலத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த தாம்பாளத்தில் சுத்தமான மஞ்சள் தூளை போட்டு பன்னீர் ஊற்றி பிள்ளையார் பிடிப்பது போல் கொஞ்சம் பெரியதாக பிடித்துக் கொள்ளுங்கள்.

அடுத்ததாக ஒரு நிலக் கடலையை எடுத்து அதை இரண்டாக உடைத்து வராகி அம்மனின் கொம்புகள் எப்படி இருக்குமோ அந்த வகையில் மஞ்சளில் வைக்க வேண்டும். அடுத்ததாக வராகி அம்மனுக்கு குங்குமம் வைத்துக் கொள்ளுங்கள். அதாவது நாம் பிள்ளையாரை எப்படி மஞ்சள் பிடித்து வைத்து வழிபாடு செய்கிறோமோ அதே போல் இந்த வழிபாட்டில் வாராகி அம்மனை மஞ்சளில் பிடித்து வைத்து வழிபாடு செய்யப் போகி றோம்.

இப்படி வராகி அம்மனை மஞ்சளில் பிடித்து வைத்துவிட்டு அம்மனுக்கு ஏதாவது ஒரு பழத்தை நெய்வேத்தியமாக வைத்துக் கொள்ளுங்கள். அடுத்ததாக அம்மனுக்கு மலர்களை சூட்டி அம்மனுக்கு என்று தனியாக ஒரு தீபத்தை ஏற்றி வைத்துக் கொள்ளுங்கள். பிறகு அந்த தீபத்திற்கு முன்பாக அமர்ந்து “ஓம் வராகிதாயே போற்றி” என்னும் மந்திரத்தை 108 முறை மனதார உச்சரிக்க வேண்டும்.



இப்படி உச்சரித்த பிறகு உங்களுடைய கஷ்டம் என்னவோ உங்களுடைய கோரிக்கை என்னவோ அதை அம்மனிடம் கூற வேண்டும். பிறகு கற்பூர தீப தூப ஆராதனை காட்டி வழிபாட்டை நிறைவு செய்து விட வேண்டும். இப்படி தினமும் இந்த மஞ்சள் வராகி அம்மனுக்கு தீபமீற்றி வழிபாடு செய்ய வேண்டும்.

12 நாட்கள் நிறைவடைந்த பிறகு 13வது நாள் மஞ்சளில் பிடித்து வைத்த வராகி அம்மனை அப்படியே எடுத்து ஒரு டப்பாவில் போட்டு வைத்துக் கொள்ளுங்கள். தினமும் காலையில் இந்த மஞ்சளை தங்களுடைய நெற்றியில் வைத்துக் கொள்வதன் மூலம் எந்தவித எதிர்மறை ஆற்றல்களும் கஷ்டங்களும் நம்மை அணுகாது.

# கர்ப்ப காலத்தின் ஒவ்வொரு மாதமும் வழிபடவேண்டிய தெய்வங்கள்!!


வயிற்றில் கரு உருவானதிலிருந்து குழந்தை பிறப்பு வரையில் (10 மாதங்கள்) அதன் வளர்ச்சியில் கிரகங்கள் தங்கள் ஆதிக்கத்தை செலுத்துகின்றன. அதனால், கர்ப்பம் தரித்தது முதல் ஒவ்வொரு மாதமும் அந்தக் கருவை ஆளுமை செய்யும் கிரகத்துக்குரிய தெய்வத்தை வணங்குவது சிறப்பு.

## 1 முதல் மாதம்

கரு உருவாகும். இதற்குக் காரக கிரகம் சுக்கிரன். ஸ்ரீபுவனேஸ்வரி, ஸ்ரீலட்சுமி மற்றும் இந்திராணியை வணங்கலாம்.

## 2வது மாதம்

இந்த மாதம் கரு சற்று மென்மை தன்மையை அடைந்திருக்கும். செவ்வாய் அதிபதி. ஸ்ரீமுருகனையும், க்ஷேத்ர பாலகர்களையும் வணங்கவேண்டும்.



## 3வது மாதம்

குழந்தையின் கை, கால்கள் உருவாகியிருக்கும். குரு அதிபதி. இந்திரன், பிரம்மா மற்றும் ஸ்ரீதட்சிணாமூர்த்தியை வணங்க வேண்டும்.

## 4வது மாதம்

குழந்தையின் எலும்பு மற்றும் நரம்பு உருவாகும் மாதம். சூரியன் அதிபதி. சிவனாரை வணங்கினால், கரு நல்ல வளர்ச்சி பெறும்.

## 5வது மாதம்

குழந்தையின் தோல் மூலம் உடலமைப்பு உருவாகிக் கொண்டிருக்கும். சந்திரன் அதிபதி. ஸ்ரீகௌரி மற்றும் ஸ்ரீதுர்கை அம்மனை வணங்க வேண்டும்.

## 6வது மாதம்

குழந்தையின் அங்கம், ரோமம், நகம் உருவாகும். சனி அதிபதி. ஸ்ரீஆஞ்சநேயர், ஸ்ரீபைரவர் மற்றும் ஸ்ரீவிநாயகரை வழிபடவும்.

## 7வது மாதம்

பிராணன் உருவாகும். புதன் அதிபதி. ஸ்ரீவிஷ்ணுவை வணங்கவேண்டும்.

## 8வது மாதம்

கருவின் உடல் வளர்ச்சி பெருகும். ஸ்ரீவிநாயகரை வணங்கவேண்டும்.

## 9வது மாதம்

கரு முழு வளர்ச்சி பெற்றிருக்கும். சந்திரனே அதிபதி. ஸ்ரீகௌரி மற்றும் துர்கையை வழிபட வேண்டும்.

## 10வது மாதம்

குழந்தை பிறந்துவிடுவதால் ஆத்ம பலம் பெறும். இதற்கு ஆத்மகாரகனான சூரியன் அதி பதி. சிவனாரை வழிபட வேண்டும்.

e-magazine
aanmeegamalar.com

# ஜபமாலை சின்முத்திரையுடன் முருகன்

- முருகன் அழித்த ஆறு பகைவர்கள் ஆணவம், கன்மம், குரோதம், லோபம், மதம், மாற்சர்யம்.
- பசிபிக், சிஷில்ஸ், பிஜி, மடகாஸ்கர் நாடுகளிலும் முருகன் வழிபாடு உள்ளது.
- மலைகளில் குடி கொண்டுள்ள குமரனுக்குச் சிலம்பன் என்றோரு பெயர் உள்ளது. முருகனுக்கு விசாகன் என்றும் ஒரு பெயர் உண்டு. விசாகன் என்றால் மயிலில் சஞ்சரிப்பவன் என்பது பொருளாகும்.
- முருகப்பெருமானின் வலப்புறம் உள்ள ஆறு கரங்களில் அபயகரம், கோழிக்கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல் என்ற ஆறு ஆயுதங்களும், இடப்புறம் உள்ள ஆறு கரங்களில் வரமளிக்கும் கை, தாமரை, மணி, மழு, தண்டாயுதம், வில் போன்றவையும் இருக்கும்.
- முருகனின் கோழிக் கொடிக்கும் குக்குடம் என்றோர் பெயருண்டு. இந்தக் கோழியே வைகறைப் பொழுதில் ஒங்கார மந்திரத்தை ஒளி வடிவில் உணர்த்துவது ஆகும்.
- கந்தபுராணத்தில் வரும் சுப்பிரமணிய ஸ்தோத்திரம் தினசரி அதிகாலையில் படிப்பவர்களது அனைத்துப் பாவங்களுக்கும் நிவர்த்தியாகும்.
- முருகனுக்கு உகந்த மலர்கள் முல்லை, சாமந்தி, ரோஜா, காந்தன் முதலியவை ஆகும்.முருகனை ஒரு முறையே வலம் வருதல்வேண்டும். முருகப் பெருமானை வணங்க சஷ்டி, விசாகம், கார்த்திகை, திங்கள், செவ் வாய், ஆகிய இவை அனைத்துமே உகந்த நாட்கள் ஆகும்.
- முருகன் கங்கையால் தாங்கப்பட்டான், இதனால் காங்கேயன் என்று பெயர் பெற்றான். சரவணப் பொய்கையில் உதித்தான். ஆகையினால் சரவண பவன் என்று அழைக்கப்பட்டான் கார்த்திகை பெண்களால் வளர்க்கப்பட்டதால் கார்த்திகேயன் என்றும் சக்தியினால் ஆறு உருவமும் ஓர் உருவமாக ஆக்கப்பட்டதால் கந்தன் என்றும் பெயர் கொண்டான்.
- தமிழகத்தில் முருகனுக்குக்குடவரைக் கோயில்கள் உள்ள இடங்கள் கழுகுமலை, திருக்கழுக்குன்றம், குன்றக்குடி, குடுமியான்மலை, சித்தன்னவாசல், வள்ளிக் ரேயில், மாமல்லபுரம்.
- முருகப் பெருமானுக்காகக் கட்டப்பட்ட முதல் திருக்கோவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஒற்றைக் கண்ணூர்த் திருக்கோவில் ஆகும் முதலாம் ஆதித்த சோழன் இதனைக் கட்டினான். இந்தக் கோவிலில் முருகனுக்கு யானை வாகனமாக உள்ளது ஒரு திருக்கரத்தில் ஜபமாலையும், மறுகையில் சின் முத்திரையும் கூடிய நிலையில் இங்கே அருள் பாலிக்கிறார்.



## திருப்பதி சென்றால் மட்டும் போதாது

# பெருமாளின் வாக்கினை நிறைவேற்றினால் அதிக பலன் கிடைக்கும்

திருப்பதி வெங்கடாஜலபதியை பார்க்க இன்று லட்சக்கணக்கான ஏன்? கோடிக்கணக்கான பக்தர்கள் கூட்டம் கூட்டமாக பெருகிக் கொண்டே செல்கின்றனர். ஆனால் திருப்பதி வெங்கடேச பெருமாளை எவ்வாறு தரிசிப்பது என்பதை அறியாமலேயே பெருமாளை தரிசித்துவிட்டு வருகின்றனர்.

திருமலையில் வாசம் செய்யும் எம்பெருமானை எவ்வாறு தரிசிக்க வேண்டும் என்று பெருமாளே கூறியுள்ளார். ஆனால் இன்று பெரும்பாலானவர்களுக்கு அந்த வழிமுறை தெரியாமல் மறைக்கப்பட்டுவிட்டது, அல்லது மறைந்துவிட்டது என்பதே நிதர்சனமான உண்மை.

இன்று திருமலை யாத்திரை செல்பவர்கள் தங்களது யாத்திரை முழுமை பெறவேண்டும் என்று எண்ணினால் அவசியம் பெருமாளே கூறியுள்ள வழிபாட்டு முறையின்படி பெருமாளை தரிசனம் செய்தால் மட்டுமே முடியும்.

புராண இதிகாசத்தின் படி மகாவிஷ்ணுவுடன் கோபம் கொண்ட மகாலட்சுமி பெருமாளைவிட்டு பிரிந்து தவவாழ்க்கை மேற்கொள்ள பூலோகம் வந்துவிட்டார், பூலோகத்தில் மகாலட்சுமியை சமாதானப்படுத்தி மீண்டம் வைகுண்டத்திறகு அழைத்து செல்லும் நோக்கத்துடன் பெருமாளும் பூலோகத்திற்கு வந்தார்.

இதிகாச புராண கதைகளின்படி பெருமாள் பூலோகம் வந்த காலம்





கலியுகத்தின் தொடக்கமாகும். மகாலட்சுமி இல்லாமல் தனியே வந்த மகா விஷ்ணுவை அடையாளம் கண்டுகொண்ட பூ வராஹ ஸ்வாமி, “ஸ்ரீநிவாசா வைகுண்டத்தைவிட் ஏன் இந்த பூமிக்கு வந்தாய்” என்று கேட்டார்.

மகா லக்ஷ்மியின் இருப்பிடமான எனது மார்பகத்தில் பிருகுமஹர்ஷி தன் பாதத்தால் உதைத்ததை எண்ணி வருந்திய மகாலட்சுமி தன்னை விட்டு பூலோகம் வந்து கடுந்தவம் மேற்கொள்ளவிருக்கிறார் அவரை சமாதானம் செய்து அழைத்து செல்ல தான் பூலோகத்திற்கு வந்ததாக, பூ வராஹ ஸ்வாமியிடம் பெருமாள் கூறினார்.

பெருமாள் இங்கு தங்குவதில் தடையில்லை, ஆனால் அவ்வளாறு தங்குவதால் தனக்கு என்ன பயன் என்று பூ வராஹ ஸ்வாமி பெருமாளிடம் கேட்க.

இந்த இடத்தில் தான் தங்க பணம் பொருளை தருவதைவிட, மேலான வரத்தைத் தருவதாக கூறினார்.

அதன்படி

எனது தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் முதலில் புஷ்கரிணியில் நீராடி, எனது தரிசனத்திற்கு முன் வராஹ க்ஷேத்திரத்தில் உங்களை தரிசிக்க வேண்டும், மேலும் தங்களுக்கு எப்போதும் பால் அபிஷேகம் செய்கிறேன் என்று கூறினார்..

பெருமாளின் மேற்கண்ட வாக்கினை ஏற்றுக் கொண்டு, ஸ்ரீநிவாஸருக்கு வராஹ க்ஷேத்திரத்தில் 100 அடி இடம் கொடுத்ததாக வெங்கடாசல மஹாத்யத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றி லிருந்து இன்று வரை வராஹ மூர்த்திக்கும், வெங்கடேசப் பெருமானுக்கும் வழக்கமான சேவைகள் நடைபெற்று வருகின்றன.

திருமலைக்கு வரும் பக்தர்கள் முதலில் புஷ்கரிணி ஸ்நானம் செய்ய வேண்டும் என்று ஸ்ரீ வெங்கடேஸ்வரரே முடிவு செய்தார் என்பது இந்த புராணக்கதையில் இருந்து தெரிகிறது.

திருப்பதி சென்று பெருமாளை தரிசனம் செய்ய செல்பவர்கள் முதலில் பெருமாளின் வாக்கின்படி முதலில் வராஹ சுவாமியை தரிசனம் செய்ய வேண்டும்.

அதன்பின்னர் ஸ்ரீநிவாசபெருமாளை தரி சித்தால் திருப்பதி சென்ற பலன் நூறு சதவீதம் முழுமையாக கிடைக்கும்.

ஆனால் இன்று இந்த புராண நிகழ்வு அறியாத 99% பக்தர்கள் தல புராணம் தெரியாமல் நேரடியாக ஸ்ரீவாரி தரிசனத்திற்கு செல்கின்றனர்.

இனியாவது திருமலைக்கு செல்பவர்கள் புஷ்கரிணியில் ஸ்நானம் செய்யாவிட்டாலும், முகம், கால், கைகளை கழுவிவிட்டு, வராஹ பகவானை தரிசனம் செய்துவிட்டு பின்னர் ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமியை தரிசனம் செய்யச் சென்றால் நினைத்த காரியங்கள் நிறைவேறும் என்கின்றனர் ஆச்சாரியர்கள்.



ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

**ஆன்மிகமலர்** மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த

**172** க்கும் மேற்பட்ட இதழ்களை



**aanmeegamalar.com**

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.

# வகை வகையான பலன் தரும் காசி விநாயகர்கள்



விகட த்விஜ விநாயகர்



ராஜ புத்திர விநாயகர்

### விகட த்விஜ விநாயகர்

பாஸ் பாணி விநாயகரின் தெற்கே விகட த்விஜ விநாயகர் இருக்கிறார். விகட த்விஜ விநாயகரை வழிபட்டால் வாழ்வில் உயர்ந்த பதவி கிடைக்கும்.

காசி காண்டம் இந்த விநாயகரை விகட தண்ட விநாயகர் என்றுகுறிப்பிட்டுகிறது.

### ராஜ புத்திர விநாயகர்

ராஜபுத்திர விநாயகரை வழிபடுவதன் மூலம், தோற்றுப்போன மன்னன் கூட இழந்த ராஜ்யத்தை மீண்டும் பெற முடியும். இன்றைய சூழ்நிலையில் உயர் பதவிகளை பெற விரும்பும் பக்தர்களுக்கு இது பொருந்தும்.

### பிரணவ விநாயகர்

காசி காண்டம் ஒரு சக்தி வாய்ந்த பிரணவ விநாயகரை குறிப்பிடுகிறது. பிரணவ விநாயகரை தவறாமல் வழிபடும் பக்தன் சொர்க்கத்தில் தனக்கான இடத்தைப் பெறுவான்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்




e-magazine
aanmeegamalar.com


வக்ர துண்ட விநாயகர்


த்ரி முக விநாயகர்


பஞ்சாஸ்ய விநாயகர்


ஹேரம்ப விநாயகர்

### வக்ர துண்ட விநாயகர்

காசியின் வடக்கு பகுதியில் வக்ர துண்ட விநாயகர் இருக்கிறார். வக்ர துண்ட விநாயகர் பக்தர்கள் செய்த தீய விளைவுகளை பாப கர்மாவை (பாவங்களை) நீக்கி, ஒட்டுமொத்தமாக அவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறார்.

### ஏக தந்த விநாயகர்

ஏக தந்த விநாயகர் தீய பிடியிலிருந்து ஆனந்த வனத்தை (காசியை ) பாதுகாக்கிறார்.

### த்ரி முக விநாயகர்

த்ரி முக விநாயகர் பக்தர்களின் சகல பயங்களையும் நீக்க வல்லவர்.



e-magazine
aanmeegamalar.com

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.





விக்ன ராஜ விநாயகர்



பிரணவ விநாயகர்

இந்த விநாயகரின் ஒரு முகம் குரங்கு, இரண்டாவது முகம் மூன்றாவது சிங்கம், முகம் யானையை குறிக்கிறது.

## பஞ்சாஸ்ய விநாயகர்

கூஷ்மாண்ட விநாயகரின் கிழக்கு நோக்கி பஞ்சாஸ்ய விநாயகர் இருக்கிறார். காசி காண்டம் பஞ்சாஸ்ய விநாயகரை பஞ்ச முக விநாயகர் (ஐந்து முக விநாயகர்) குறிப்பிடுகிறது. என்று

## ஹேரம்ப விநாயகர்

ஹேரம்ப விநாயகரை வழிபட்டால் பக்தர் களின் சகல விருப்பங்களும் நிறைவேறும்

## விக்ன ராஜ விநாயகர்

காசியில் பக்தர்கள் சித்திக்காக விக்ன ராஜ விநாயகரை வழிபடுகிறார்கள். சித்தி என்பது இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளை அடைதல் அல்லது வெற்றி அல்லது செழிப்பு என்று பொருள்படும்.

## வரத விநாயகர்

இந்த விநாயகர் பக்தர்களுக்கு தெய்வீக விருப்பத்துடன் அருள்பாலிக்க வல்லவர்.



மோதக ப்ரிய விநாயகர்

## மோதக ப்ரிய விநாயகர்

மோதக ப்ரிய விநாயகரை வழிபட்டால் வழிபடுபவர்களுக்கு எல்லாவிதமான வெற்றியும் கிடைக்கும். இந்த விநாயகர் மஹா பீடம் என்ற சக்திபீடத்தில் வீற்றிருக்கிறார். ஆக, இங்கு செய்யப்படும் எந்த பூஜையும் பன்மடங்கு பலன்களை தரும்.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

e-magazine
aanmeegamalar.com





# குழந்தைகளுக்கு பேசும் ஆற்றல் வழங்கும் பேச்சியம்மன்

மதுரை மாநகரின் சிம்மக்கல் பகுதியில் வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ள ஆலயத்தில் வீற்றிருக்கும் பேச்சியம்மன் சுயம்பு மூர்த்தியாவார்.

இந்த ஆலயத்தில் உள்ள பேச்சியம்மன் வலது புறம் ஓங்கிய கையுடனும், இடது கையில் குழந்தையுடனும், காலில் அரக்கனை மிதித்து இருப்பது போன்றும் இருக்கிறது.

இந்தப் பேச்சியம்மனைச் சரஸ்வதியின் மற்றொரு தோற்றமென்று இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆலயம் எழுநூறுஆண்டுகள் பழமை வாய்ந்ததாக கருதப் படுகிறது.

இந்த ஆலய வளாகத்தினுள் பேச்சியம்மன் தவிர, விநாயகர், முருகன், மீனாட்சி சுந்தரேஸ்வரர், மகாலட்சுமி, சரஸ்வதி, தட்சிணா மூர்த்தி, காளி, துர்க்கை,தத்தாத்ரேயர், ஆஞ்சநேயர், நவக்கிரகங்கள், கருப்பசாமி, இருளப்பசாமி, அய்யனார், வீரமலை, பெரியண்ணன், சின்னண்ணன், சப்த கன்னியர், நாகர் உள்பட 21 தெய்வங்களுக்கான சிலைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.



பேச்சுக் குறைபாடு உள்ளவர்கள், பேச்சாற்றல் வேண்டுபவர்கள் இந்த அம்மனை வணங்கினால் குறைகள் நிவர்த்தியாகும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

கல்விக் கடவுளான சரஸ்வதியின் மறுதோற்ற மாகக் கருதப்படும் இந்த அம்மனை வழிபட்டு மாணவர்கள் தங்கள் கல்வியில் சிறப்பிடத்தைப் பெற முடியும்.

ராகு, கேது தோஷமுடையவர்கள் இந்தக் கோவில் வளாகத்தில் உள்ள நாகரை வழிபட்டு, அதன் பிறகு அம்மனை வணங்கி நற்பலன்களைப் பெறலாம்.

# சித்தர்கள் என்பது யார்...?

உலகத்தில் எந்த மதத்திலும் இல்லாத புதுமை நமது ஹிந்து மதத்தில் உண்டு கடவுளுக்கு உருவம் உண்டு பூஜை வழிபாடுகள் அவருக்கு தேவை அவருக்கு தொண்டு செய்வதே மனிதனின் கடமை என்று சொல்பவர்களும் ஹிந்துக்களே கடவுளுக்கு உருவம் இல்லை அவரை தனிப்பட்ட ரீதியில் சுட்டிக்காட்ட எந்த குறியிடும் உதவாது பார்க்கும் பொருள் ஒவ்வொன்றிலும் அவர் இருக்கிறார் அவருக்கு ஆலயமோ வழிபாடோ தேர் திருவிழாக்களோ அவசியம் இல்லாதது என்று சொல்பவர்களும் ஹிந்துக்களே.

**கடவுள் உருவாக்கிய மதம்**

கடவுள் மனித வடிவமாக இருக்கிறார் கஷ்டப்பட்டு துன்பப்பட்டு வேதனையில் அல்லலுறும் தரித்திரனுக்கு தொண்டு செய்வதே இறைவனுக்கு வழிபாடாகும் என்று அஹிம்சை சேவையை பற்றி அக்கறையோடு பேசுபவர்களும் யாக குண்டம் என்பதுமனித உடம்பு.

அதில் எரிகின்ற நெருப்பு மனிதனதுஞானம் அதில் போடப்படுகிற ஆகுதி பொருள்கள் எல்லாம் காமம், மோகம், லோபம் போன்ற ஆணவத்தின் கழிவு பொருள்களே என்று ஞான மார்க்கம் பேசுபவர்களும் சதா சர்வகாலம் இறைவனை பற்றியே சிந்தனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை காரணம் இறைவன் இவன் தன்னை நினைக்கிறானா? இல்லையா என்பதை கண்காணிப்பவனாக எப்போதும் இல்லை தனக்கு இடபட்டிருக்கின்ற கடமையை சரிவர செய்கிறானா? என்பதை மட்டுமே




பார்க்கிறான் என்று கர்ம யோகம் பேசுகிறவர்களும் ஹிந்துக்களே.

கடவுளும் இல்லை அவனை அடைவதற்கு வழிகளும் இல்லை இல்லாத பொருளை இருப்பதாக நினைப்பதும் அதை அடைவதற்கு பாடு படுவதும் அறியாமையின் வெளிபாடு நாம் கண்களால் பார்ப்பது மட்டுமே காதுகளால் கேட்பது மட்டுமே நிஜமானது நமது புலங்களுக்கு அப்பாற்பட்டு எந்த சக்தியும் கிடையாது இந்த உலகமும் இதிலுள்ள பொருள்களும் ரசாயனங்களால் தானாக உருவானதே தவிர இதை கடவுள் படைக்கவில்லை படைப்பதற்கு கடவுள் என்ற சக்தி தனியாக தேவை இல்லை என்று நாத்திகம் பேசுபவர்களும் ஹிந்துக்களே இது மட்டும் தான் ஹிந்து மதத்தின் தனித்தன்மை என்று அடித்து சொல்லலாம். வேறு எந்த மதத்திலும் கடவுள் இல்லை என்று சொல்லி கொண்டு அந்த மதத்திலேயே இருக்க முடியாது. கடவுள் இல்லை என சொல்பவர்கள் ஒன்று ஒதுக்க படுவார்கள் அல்லது ஒழித்து கட்ட படுவார்கள். இது தான் மற்ற மதங்களில் நடக்கும் ஆனால் ஹிந்து மதத்தில் மட்டுமே நாத்திகம் பேசுகின்றவனும் கடவுளின் குமாரனே என்று அரவணைக்கும் தன்மை இருக்கிறது.

இப்படி வழிபாட்டு சுதந்திரத்தை வாரி வழங்கி இருப்பதில் பல இடர்பாடுகள் இருப்பது உண்மை என்றாலும் அறவழி நின்ற அறிவுவழி வென்ற பல ஞானிகளும், யோகிகளும், சித்தர்களும் இந்தியாவில் மட்டுமே குறிப்பாக ஹிந்து மதத்தில் மட்டுமே மிக அதிகமாக தோன்றி னார்கள். மற்ற மதங்களில் ஒரே ஒருவரை மட்டும் கடவுளின் குமாரர் இறை தூதர் என்று போற்றி புகழ்வார்கள். மற்றவர்களின் அறிவு வெளிச்சமும் கருணையின் ஈர பதமும் வலுகட்டாயமாக மூடி மறைக்கப்பட்டு விடும். ஹிந்து மதம் அப்படி அல்ல எத்தனை மகான்களோ இந்த பூமியில் அத்தனை பேருக்கும் வந்தனம் என்று யாரையும் விட்டு விடாமல் போற்றி வணங்குகிறது.

இத்தகைய சுதந்திரம் உள்ள மதத்தில் பல அருளாளர்கள் தோன்றுவார்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. நமது மதத்திலும் பல ஞான புருஷர்கள் தனியாகவும் கூட்டாகவும் தோன்றி இருக்கிறார்கள். அப்படி பட்ட ஒரு அருள் கூட்டமைப்பே சித்தர்கள் என்ற திருபெயரால்





அழைக்க படுகிறார்கள். ஹிந்து மதத்தில் வைஷ்ணவம் சைவம் சாக்தம் காணபத்யம் கௌமாரம் சௌரவம் என்ற பிரிவுகள் எவ்வளவு முக்கியம் வாய்ந்ததோ அவ்வளவு முக்கியம் வாய்ந்தது சித்தர் மரபு என்ற பிரிவு.

தட்டி கேட்க ஆளில்லை என்றால் தம்பி சண்ட பிரசண்டன் என்று சொல்வார்கள். அதாவது தன்னிச்சையாக ஒருவனை செயல்பட விட்டால் அவன் தான் தோன்றி தனமாக நடந்து மற்றவர்களுக்கு கேடு செய்வான் என்பது இதன் பொருளாகும். இதே போலவே நமது ஹிந்து மதத்திலும் அவ்வப்போது தன்னிச்சையான செயல்பாடுகள் பல தோன்றி மக்களை தவறான மார்க்கத்தில் அழைத்து போன காலங்களும் உண்டு அப்படி பட்ட காலங்கள் தோறும் இறைவன் அவதாரங்கள் எடுத்து தடுத்தாட்கொண்டு நமது தர்மத்தை காப்பாற்றி இருக்கிறான்.

தான் வராத போது தனது கணங்களில் யாரையாவது ஒருவரை அனுப்பி நம்மை கரை சேர்ப்பான் என்பது ஐதீகம். அப்படி பாழ்பட்டு கிடந்த மக்களை கரை சேர்ப்பதற்கு அவ்வப்போது இறைவனால் அனுப்பி வைக்கப் பட்ட அருளாளர்களின் கூட்டத்தின் பெயரே சித்தர்கள் என்பதாகும்.




இறைவனின் அடியார்கள் சித்தர்கள் என்பது அனைவரும் அறிந்த விஷயம் ஆனால் சித்தர்கள் என்ற சொல்லுக்கு நிஜமான அர்த்தம் என்னவென்று இதுவரை எவராலும் அறுதியிட்டு சொல்ல முடியவில்லை. சித்தம் என்ற சிந்தனையை அடக்கியவர்கள்

e-magazine
aanmeegamalar.com



அதில் வெற்றி கண்டவர்கள் சித்தர்கள் என்று ஒருசாராரும், ஸித்தி என்ற அமானுஷ்யமான வெற்றிகளை அடைந்தவர்கள் சித்தர்கள் எனவே தான் அவர்களை அப்படி அழைக்கிறோம் என்று ஒரு சாராரும், பண்டைய கால யோக சாஸ்திரம் அஷ்டமா சித்துகளை பற்றி பேசுகின்றன அந்த எட்டுவகை சித்துக்களை பெற்றவர்கள் இவர்கள் எனவே இவர்களை சித்தர்கள் என்று அழைக்கிறோம் என ஒருசாராரும் சித்தர்கள் எப்போதுமே ஒரே இயல்பில் இருப்பவர்கள் அல்ல மனம் போனபடி செயல்படுபவர்கள் அதனால் அவர்களை சித்தர்கள் என்று அழைக்கிறோம் என ஒரு சாராரும் சொல்கிறார்கள்.

இதில் எது சரி? எது தவறு? என்றுமுடிவு சொல்ல கூடிய தகுதி இதுவரை பூமியில் எவருக்கும் இல்லை. அதனால் இவைகள் எல்லாம் அடங்கிய ஒட்டு மொத்த வடிவமே சித்தர்கள் என்று நாம் முடிவு செய்து கொண்டால் அது தவறு அல்ல.

சித்தர்கள் என்ற வார்த்தையை கேட்டவுடன் இன்று பலருக்கும் ஒருவித ஈர்ப்பு ஏற்படுகிறது. அதற்கு மிக முக்கிய காரணம் சித்தர்களிடம் சாதாரணமான மனித செயல்கள் மறைந்து அசாதாரணமான சக்திகள் இருக்கிறது என்ற நம்பிக்கையே ஆகும். அசாதாரணமான சக்திகள் என்றால் அது அவர்களிடம் நிறைந் திருக்கும் ஸித்தியை ஆகும். அத்தகைய ஸித்திகளை பற்றி நமது பண்டைய நூல்கள் என்ன சொல்கின்றன என்பதை ஓரளவு தெரிந்து கொண்டால் நமக்கும் சித்தர் களை பற்றி எளிதாக புரிந்து கொள்ளும் வகை ஏற்படும்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

பொதுவாக ஸித்தி என்பதை சாதனைகள் என்று சொல்லலாம். சாதனைகள் என்ற பொருள் வந்தவுடன் அது நம்மை போன்ற சாதாரண மனிதர்கள் நிகழ்த்துகின்ற செயற்கரிய செயல்களை போன்ற சாதனைகளோ என்ற ஐயம் ஏற்படும்.

ஆனால் சித்தர்களின் சாதனைகள் மனித சாதனைகளை போல் சாதாரணமானது அல்ல அதிஅற்புதம் நிறைந்தது மனித புலன்களுக்கு அப்பாற்பட்டது அமானுஷ்யமானது இது மட்டுமல்ல மனிதனை இறவாத பெருநிலைக்கு அழைத்து செல்ல கூடியது.

நமது ஹிந்து மதத்தில் மிக முக்கியமாக எட்டுவகை சித்துகளை பற்றி தகவல்கள் உள்ளன அவை கள் அணிமா, லகிமா, மஹிமா, ப்ராஹாம்யம், ப்ராப்தி, வாசித்வம், ஈஷித்வம், காமாவாசாயித்வம் என்பவைகள் ஆகும்.

இதை தமிழில் சொல்வது என் றால் கண்ணுக்கு தெரியாத கடுகை போல மிக சிறிய உருவத்தை எடுப்பது மிகவும் மேலானநிலையை அடைவது ஆயிரம் கண்களாலும் பார்க்க முடியாத மிக பிரம்மாண்ட மான உருவத்தோடு தோன்றுவது. கூடுவிட்டு கூடு பாய்தல் உட்பட நினைத்த காரியங்கள் அனைத்தையும் நினைத்த

e-magazine
aanmeegamalar.com

மாத்திரத்தில் செய்து முடிப்பது. விரும்பியதை அடைவது ராஜாதி ராஜன் என்றலும் அவனை காலடியில் விழ செய்வது. நூற்றில் ஒருவராக இல்லமல் அனைவரையும் விட மேலான நிலையில் இருப்பது எல்லாவிதமான ஆசைகளையும் அடக்குவது என்று சொல்லல்லாம்.

இத்தகைய ஸித்திகளை பற்றி இந்திரியங்களை வென்று நிலையான சித்தத்தை உடையவனாகதிகழ்ந்து என்னிடமே மனதை அசையாது வைத்த யோகிக்கு அனைத்துவித மான ஸித்திகளும் தானாக வந்தமை யும் என பகவான் கண்ணன் ஸ்ரீமத் பாகவதத்தில் குறிப்பிடுகிறார். அவர் மேலும் இத்தகைய ஸித்திகளை பற்றி உத்வர் என்பவரிடம் கூறுவதை கவனத்தில் கொள்ள வேண்டும்.




தன்னால் பத்தினெட்டுவகையான ஸித்திகள் படைக்க பட்டதாகவும் அவற்றில் எட்டுவகை ஸித்துபுகழ்பெற் றது என்றும் கூறுகிறார். அதாவது நாம் மேலே பார்த்த அஷ்டமா ஸித்தி களை தவிர வேறு பத்து வகை ஸித்திகளும் ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப் பட்டுள்ளன.

அனுர்மிதத்துவம் என்ற பசி தாகம் இல்லாமல் பல காலம் வாழ்வது, தூரச்ரவணம் என்ற வெகு தொலைவில் எழும்புகின்ற ஓசைகளை கேட்பது, தூரதர்ஷனம் என்ற தூரத்து காட்சிகளை உட்கார்ந்த இடத்திலேயே பார்ப்பது மனோஜவம் என்ற மிக வேகமாக உடம்பை கொண்டு கடந்து போகுதல் காமரூபம் என்ற விரும்பிய படி தனது உருவத்தை மாற்றி அமைத்து கொள்ளல் பராகாயபிரவேசம் என்ற பிற உயிர்களின் சரிரத்திற்குள் தனது உயிரை செலுத்தி விரும்பும் காலம் வரை வாழ்தல்.

ஸ்வச்சந்தம்ருத்யு என்ற நினைத்த நேரத்தில் மரணத்தை அடைதல் ஸககிரீடானுதர்சனம் என்ற தேவ மாதர்களை நேருக்கு நேராக பார்த்தல் சங்கல்பசம்ஸித்தி என்ற விரும்பிய பொருளை அடைதல் ஆக்ஞை என்ற சர்வ சுதந் திரமாக அனைத்து இடங்களுக்கும் சென்று வருதல் என்ற பத்து வகை ஸித்திகளும் அதிக படியாக பாகவதத்தில் தரப்பட்டிருக்கிறது.

சித்தர்கள் என்பவர்கள் பொன்னாசை, பொருளாசை, பெண்ணாசை ஆகிய மூன்று வகையான ஆசைகளுக்கும் அப்பாற்பட்டவர்கள். அவர்களில் மிக முக்கியமான நோக்கம் ராஜாக்களை போல் பூமியில் வாழ்வது அல்ல சர்வ வல்லமை படைத்த சர்வேஸ்வரனின் பாத கமலங்களை சென்றடைவதே சித்தர்களின் முதலும் முடிவானமும் நோக்கம் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதாக இந்த பதினெட்டு வகை சித்துகளும் இல்லை என்பது சிறிய குழந்தைகளுக்கு கூட தெரியும். தங்களுடைய இறுதி லட்சியத்திற்கு தேவைபடாத இந்த சித்துகளை அவர்கள் விரும்பி பெறுவதற்கு காரணம் என்ன? அவற்றால் அவர்கள் அடைந்த நன்மைகள் என்ன? என்பதை மேலோட்டமாக பார்த்தால் நம்மால் புரிந்து கொள்ள இயலாது. பாதாளத்தை தோண்டி பகிரதன் கங்கையை வெளிக்கொண்டு வந்ததை போல சித்தர்களின் செயல்பாடுகளை ஆழாமாக ஆராய்ந்தால் மட்டுமே அதற்கான விடைகள் கிடைக்கும். அந்த விடைகளை அடுத்த பதிவில் பார்ப்போம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

e-magazine
aanmeegamalar.com



# நரசிம்மர் வழிபட்ட அருள்மிகு கஸ்தூரி அம்மன் திருக்கோயில்

இரண்யனை வதம் செய்த தோஷம் நீங்க ஈசனை நரசிம்மர் வழிபட்ட தலம், நரசிங்கம் பேட்டை. மயிலாடுதுறையிலிருந்து 10 கி.மீ. தொலைவில் நரசிங்கம்பேட்டை உள்ளது.

இங்கு வீற்றிருந்து தன்னை வணங்குவோர்க்கு வேண்டும் வரம் அளித்து, அவர்கள் கஷ்டங்களைப் போக்குகிறாள் கஸ்தூரி அம்மன்.

கஸ்தூரி அம்மனின் பராக்கிரமங்களை விவரிக்கும் அழகிய வண்ண ஓவியங்கள் மேற்கூரையில் வரையப்பட்டுள்ளது. சிறிய கோயில் என்றாலும், சுற்றி வர பிராகாரமும் உள்ளது.

கஸ்தூரி அம்மன், பல நூறு குடும்பங்களுக்குக் குலதெய்வமாக விளங்குகிறாள். வெள்ளிக் கவசம் சாத்தப்பட்டு அழகிய திருவுருவில் அம்மன் அருள்பாலிக்கிறாள். மணப்பேறு, மகப்பேறு உள்பட பதினாறு பேறுகளையும் அருளும் இந்த அம்மனை ஆடியில் வழிபடுவது மிகவும் சிறப்பாகக் கருதப்படுகிறது.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்











நமது இதழுக்கு விருப்ப சந்தா செலுத்த விருப்பமுள்ளவர்கள்

UPI மற்றும் வங்கி வாயிலாகவும் செலுத்துங்கள்...

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA
(KODAMBAKKAM BRANCH)

ஆன்மிகமலர் மெயில் புக்



# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்









# திருமண தடையா?



## ஆண், பெண் இருபாலருக்கும்

## உடனடி பலன் தரும் வழிமுறை

e-magazine

aanmeegamalar.com



திருமணம் நடைபெறாமல் பல்வேறு தடைகளை சந்தித்து வரும் ஆண் பெண் இருபாலருக்கும், தங்கள் திருமணத்தில் உள்ள தடைகளை நீக்க பல்வேறு பரிகாரங்களை செய்திருந்தாலும் திருமணம் நடைபெறாமல் தள்ளிப்போவதாக கருதுபவர்களுக்கு, எளிமையான பரிகாரம் ஒன்று உள்ளது.

ஆண், பெண் இருவருக்கும் தனித்தனியாக செய்ய வேண்டிய எளிய பரிகாரம், இதற்கு பெரிய செலவோ, நேரமோ தேவையில்லை, அதைப் பற்றி பார்ப்போம்.

### ஆண்களுக்கு விரைவில் திருமணம் நடக்க சொல்ல வேண்டிய ஸ்லோகம்

விதேஹி தேவி கல்யாணம்
விதேஹி விபுலாம் ச்ரியம்
ரூபம் தேஹி ஜயம் தேஹி
யசோ தேஹி த்விஷா ஜஹி.

பத்னீம் மனோரமாம் தேஹி
மானோவ்ருத்தானு ஸாரீனீம்
தாரினீம் துர்கஸம்ஸார
ஸாகரஸ்ய குலோத்பவாம்.
விதேஹி தேவி கல்யாணம்
விதேஹி விபுலாம் ச்ரியம்
ரூபம் தேஹி ஜயம் தேஹி

யசோதேஹி தீவிஷா ஜஹி

இந்த ஸ்லோகத்தை தினமும் காலையில் பாராயணம் செய்ய வேண்டும். இத்துதியை அவரவர் ஜென்ம நட்சத்திரத்துக்கு ஏற்ற நாளில் சொல்ல ஆரம்பிப்பது நல்லது.

இந்த ஸ்லோகத்தை வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் ஸ்ரீ சோமாஸ்கந்த மூர்த்தியையும், ஸ்ரீ லக்ஷ்மி சமேத நாராயணர், ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மர், ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் போன்ற தம்பதி சமேதரராய் வீற்றிருக்கும் சன்னதி முன் சொல்லவேண்டும்.

இப்படி தம்பதி சமேதராக விளங்கி தரிசனம் தரும் தெய்வங்களை தரிசித்து ஸ்லோகம் சொல்லி வழிபட்டால் கைமேல் பலன் கிடைக்கும்.

## பெண்கள் விரைவில் திருமணவாழ்க்கை பெற மந்திரம்

திருமண தடை நீக்கும் ஸ்வயம்வர பார்வதி மூல மந்திரம்

குத்துவிளக்கினை ஏற்றி கிழக்கு முகமாக வைத்துக் கொள்ள வேண்டும். விளக்கிற்கு மல்லிகை மலர் சாற்றி குங்குமத்தினால் அல்லது புஷ்பத்தினால் அர்ச்சனை செய்தபடி கீழ்க்கண்ட சக்தி வாய்ந்த சுலோகத்தை 28 தடவைகள் வீதம் நாள்தோறும் கூறி வழிபட வேண்டும்.

ஓம் ஹ்ரீம் யோகினீம்
யோகினி யோகேஸ்வரி
யோக பயங்கரி ஸகல ஸ்தாவர
ஜங்கமஷ்ய முக
ஹ்ருதயம் மம வசம்
ஆகர்ஷ ஆகர்ஷாய நமஹ

எனக்கூறி கற்பூர தீபம்/ நெய் தீபம் காட்டி வணங்கி வரவேண்டும். இவ்வாறு பக்திப் பெருக்குடன் செய்து வந்தால் விரைவில் திருமணம் கைகூடும்.

## நல்ல துணை கிடைக்க பொதுவாக அனைவரும் சொல்லக்கூடிய மந்திரம்

பொதுவாக திருமண வயதில் இருப்பவர்கள் நல்ல வரன் வேண்டி, மனதிற்கு பிடித்தவாறு மணமகன், மணமகள் அமைய வேண்டி இறைவனை பிரார்த்திக்கும் வகையில் சொல்லக் கூடிய மந்திரங்களும் உண்டு. பின்வரும் ஸ்லோகத்தை கல்யாணம் ஆக வேண்டியவர்கள் அனைவரும் சொல்ல வேண் டியது:

தேவக்யா சுப்ரஜா கிருஷ்ண ருக்மிணீ
ப்ரியவல்லப விவாஹம் தேஹிமே ஸீக்ரம்
வாஸுதேவ நமோஸ்துதே
ஸ்ரீகிருஷ்ண பூஜா கல்பம்

பொது பொருள்: தேவகியின் மைந்தனான ஸ்ரீ கிருஷ்ணா, ருக்மிணிக்கு மிகவும் பிரியமானவனே, நமஸ்காரம். எனக்கு சீக்கிரம் விவாஹம் நிகழ அருள் புரிவாய், வாஸுதேவனே தங்களை வணங்குகிறேன். இந்த ஸ்லோகங்களை நல்ல நாள், நட்சத்திரம், ஹோரரை பார்த்து பாராயணம் செய்ய ஆரம்பிப்பது நல்லது.



e-magazine
aanmeegamalar.com

# சிவபெருமானின் மூன்று வித வடிவங்கள்

e-magazine
aanmeegamalar.com

உயிர்கள் உய்வு பெறவேண்டும் என்பதற்காக சிவபெருமான் மூன்று விதமான வடிவங்களை எடுத்துக் கொண்டு வந்து நமக்கு அருள் செய்கின்றான். அவ்வடிவங்கள்,

## அருவம்

சிவம் அதி சூக்குமம் கண்ணுக்குப் புலனாகாது இது நிட்களத் திருமேனி எனவும் சொல்லப்படும்.

## உருவம்

மகேஸ்வரன் தூலம் கண்ணுக்குப் புலப்படும். இது சகல நிட்களத் திருமேனி எனவும் சொல்லப்படும்.

## அருஉருவம்


அருஉருவம் சதாசிவன் சூக்குமம் வடிவம் இல்லை இது சகள நிட்களத் திருமேனி எனவும் சொல்லப்படும்.

இதில் அருவம் கண்ணுக்குப் புலனாகாது. உருவம் உமாமகேசுவரர், தட்சிணாமூர்த்தி, நட ராஜர் போன்றவை.

இந்த உருவத் திருமேனிகள் அறுபத்தி நான்கு வகையாக உள்ளதாக ஆகமங்கள் கூறுகின்றன. அதிலும் சிறப்பாக இருபத்தி ஐந்து வடிவங்கள் மகேஸ்வர மூர்த்தங்கள் என்று சொல்லப்படுகின்றன.

3 வதாக இருக்கக்கூடிய அருவுருவத் திருமேனியே சிவலிங்கம் எனப்படும்.

“இலிங்கம்“ என்பதற்கு “குறி “என்று பொருள். குறி என்றால் ஒரு அடையாளமாக காணமுடியாத இறைவனைக் காண்பதற்கான அடையாளமே சிவ லிங்கம் எனப்படும்.



கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்
ஒரே கிளிக் 176 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# நோய்களை தீர்க்கும் திருத்தலங்கள்

e-magazine
aanmeegamalar.com

### வைத்தீஸ்வரன் கோவில்

இந்த ஆலயத்தில் உள்ள வைத்தியநாதரை வணங்கி வழிபட தீராத நோய் தீரும். இத் தலம் செவ்வாய் பகவானின் தோல் நோய் தீர்த்த தலமாகும்.இங்கு வழங்கப்படும் திருச் சாந்துருண்டை பிரசாதம் பல நோய்களை குண மாக்கும்.

ஆன்மிகமலர் .காம்

### சங்கரன் கோவில்

ராஜபாளையம் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகில் உள்ளது சங்கரன்கோவில். இங்கு தரப்படும் புற்றுமண் பிரசாதம் சகல சரும நோய்களையும் குணமாக்கும். நாகதோஷத்தால் பாதிப்பு உள்ளவர்கள் இங்கு வந்து வழிபட நல்ல முன்னேற்றம் ஏற்படுவது கண்கூடு.

### திருச்செந்தூர்

விசுவாமித்தரரின் காசநோயை முருகன் தீர்த்த தலம் இது ஆகும். இங்கு தரப் படும் பன்னீர் இலை திருநீற்றை பூசியும் வாயில் இட்டு கொள்வதும் நோய் தீரும். அதேபோல் ஆதிசங்கரரின் நோயையும் தீர்த்த தலம்

### ஸ்ரீ முஷ்ணம்

விருத்தாச்சலத்தில் அருகில் உள்ளது இங் குள்ள பூவராகசுவாமி கோவிலில் கொடுக்கப் படும் முஷ்தாபி சூரணம் தீராத நோய் தீர்க்கும் அருமருந்தாகும்.


ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

### பழனி

இவ்வாலயத்தில் அதிகாலையில் தரப்படும் கபினி தீர்த்தம் மற்றும் சாற்றுச் சந்தனம் எந்த நோயையும் குணமாக்கும் ஆற்றல் படைத்தது

### சின்னபாபு சமுத்திரம்

விழுப்புரம் பாண்டிச்சேரி சாலையில் உள்ள கண்டமங்கலம் என்னும் ஊருக்கு




வைத்தீஸ்வரன் கோவில்


தாடிக் கொம்பு சௌந்தராஜ பெருமாள் கோவில்

அருகில் உள்ளது இங்கு சித்தர் படேசாயபு ஜீவசமாதி உள்ளது. இங்கு இந்துக்களும் இஸ்லாமியர்களும் இணைந்து வழிபாடு நடத்துகின்றனர். செவ்வாய், வியாழன், ஞாயிற் றுக்கிழமைகளில் நடத்தப்படும் வழிபாட்டில் கலந்துகொள்ள புற்று நோய், தொழு நோய், காச நோய் போன்ற நோய்கள் குணமாகிறது

## தாடிக்கொம்பு

திண்டுக்கல் தாடிக் கொம்பு சௌந்தராஜ பெருமாள் கோவிலில் அனைத்து வியாதிகள் நீக்கும் இலேகியம் மற்றும் தைலம் அமாவாசை தோறும் செய்து தரப்படுகிறது.

## இருக்கன்குடி

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகிலுள்ள இருக்கன்குடி மாரியம்மன் ஆயிரம் கண்ணுடையாள் என்றும் அழைக்கப்படுகிறாள். தீராத அம்மைநோய், கண்நோய் மற்றும் கை ,கால் போன்ற வியாதிகளையும் தீர்த்து வைக்கிறாள்.

சில குழந்தை பெரியவர் ஆகியும் கைசூப்பும் பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் அவர் களை இங்கு கூட்டி வந்து பச்சை குத்திக் கொள்ள கைசூப்பும் பழக்கத்தை விடுவது கண் கூடு ஆகும். சகல நோய்களையும் தீர்க்கும் அன்னையாக மழையைத் தரும் அன்னையாக மாரியம்மன் இருக்கிறாள்.

## திருநின்றவூர்

சென்னையில் இருந்து 33 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இங்குள்ள இறைவன் இருதயாலீஸ்வரர் இருதயம் சம்பந்தமான நோய்களை குணமாக்கவல்லவர். இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்களும் இருதய நோய் வரக் கூடாது என்பதும் இங்கு சென்று வழிபடுவது சிறந்த பலனை கொடுக்கும்.




## கோட்டூர்

விருதுநகர் சாத்தூர் நெடுஞ்சாலையில் ஸி ஸி நகர் அருகிலுள்ள கோட்டூர் இங்குள்ள குருசாமி கோவிலுக்கு அனைத்து மதத்தினரும் சென்று வழிபாடு நடத்துகின்றனர் இங்கு தரப்படும் எண்ணெய் நம் சருமத்தில் உள்ள சிலந்தி கட்டிகள் மற்றும் கட்டிகள் போன்றவற்றை குணமாக்குகிறது

## கூரம்

காஞ்சிபுரத்தில் 20 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இங்குள்ள கூரத்தாழ்வார் கண் சம்பந்த மான அனைத்து வியாதிகளையும் தீர்க்கும் அரிய சக்தி உள்ளவர்.

## திருவீழிமிமலை

தஞ்சை திருத்துறைப்பூண்டி அருகில் உள்ளதுதிருவீழிமிமலை ஆகும். இங்குள்ள பெருமாள் தன் கண்ணை கொண்டு சிவபூஜை செய்தார் என்பது சிறப்பானதால்ஞாயிறு தோறும் சிவனுக்கு தாமரை மலர் கொண்டு சிறப்பு பூஜைகள் செய்யப்படுகிறது இங்கு வந்து வணங்கி வழிபட்டால் கண்நோய் தீரும் என்பது திண்ணம்.

## திருவாதவூர்

மதுரைக்கு அருகில் உள்ளது இங்குள்ள சிவன் வாதபுரிஸ்வரர் சனி பகவானின் வாதநோய் குணமான திருத்தலம் எனவே இங்கு சிவனை வில்வம் கொண்டு திங்கள் கிழமையும் சனியை சனிக்கிழமையும் விளக்கு போட்டு வழிபட வாத நோய்கள் குணமாகும்.

– எம் அசோக் ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
செல்: 9750333265

e-magazine
aanmeegamalar.com

# சிவனின் மனதில் இருப்பவரல்ல சிவனின் மனசாகவே இருப்பவர் நந்தி

எம்பெருமான் சிவன் யோகத்தின் உச்சம். ஆதி குருவும் அவனே! எப்பொழுதும் சகஸ்ரார சக்ரத்தில் திளைத்திருப்பவன். அக்னி ஸ்வரூபம்.

அத்தகைய சிவனிடம் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், தம்மிடம் பேசுவாரா? கடைகண் காட்டுவாரா? ஞானம் அருள்வாரா? என ஒரு கோரிக்கையோ, எதிர்பார்ப்போ இல்லாமல், ஒரு சேவகனாக, முதல் பக்தனாக, சிப்பந்தியாக எப்பொழுதும் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பவர் தான் நந்திகேஸ்வரர்.

என்ன கிடைக்கிறதோ அதுவே ப்ரஸாதம்! என்ற மன நிலை. அவ்வளவு எளிதில் வந்து விடாது.

மாணவன் தயாராக இருக்கும் பொழுது குரு அவராகவே தம் கடாக்ஷத்தை மழையென பொழிவார். ஆதி சங்கரர் தம் சிஷ்யரான தோட கனுக்கு பொழிந்தாரே, அது போல. பத்ம பாதர் பெற்றாரே அது போல.

சிவனின் மனசில் இருப்பவரல்ல நந்தி, சிவனின் மனசாகவே இருப்பவர்.

அன்னை உமையவளுக்கு கூட சிவனிடம் இல்லாத உரிமை நந்திக்கு உண்டு. ஏனெனில் நந்திக்கு தம் எஜமானரிடம் எந்தவிதமான எதிர்பார்ப்புகளும் இல்லை, ஏமாற்றங்களும் இல்லை.

பகவான் பேசுவதில்லை! நம் பக்தியும் குறைவதுமில்லை!

இது நந்திக்கு மட்டுமே பொருந்தும் வரிகள். இத்தகைய நந்திக்கும் சிவனுக்கும் நடுவில் உமையே வராத போது நாமெல்லாம் எம்மாத்திரம்? தயவு செய்து அவர் காதில் எனக்கு அது வேண்டும், இது வேண்டும்! என்று இஸ்க் இஸ்கென்று கிசுகிசுக்காதீர்கள்.

அவர் எப்போதும் சிவ த்யானத்திலேயே இருப்பவர், சிவனின் கட்டளைக்கு மட்டுமே காத்திருக்கும் அணுக்கத் தொண்டர்





e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

**ஆன்மிகமலர்**மெயில்

புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD eBook DOWNLOAD eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த

**173** க்கும் மேற்பட்ட


இதழ்களை




**aanmeegamalar.com**

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.

e-magazine
aanmeegamalar.com





# நிறைவான செல்வம் தரும் அன்னம்புத்தூர் ஸ்ரீ நிதீஸ்வரர்

இன்றைய உலகில் பலர் பல விஷயங்களுக்காக நிதி இல்லாமல் தவிப்பதை கண்கூடாகபார்க்கி றோம். அந்தளவிற்கு நிதியின் தேவை அதிகரித்து விட்டது.

சிலருக்கோ நிதியை சேகரிப்பதில் சிக்கல். பலருக்கு நிதியை பாதுகாப்பதில் சிக்கல். இதற் கெல்லாம் விடை தருகின்றார் விடை வாகனரான ஸ்ரீ நிதீஸ்வரர். எங்கு?? அன்னம்புத்தூரில்... இந்த அன்னம்புத்தூரில்தான் அன்னவாகனரான பிரம்மாவும், நிதிக்கு அதிபதியான குபேரனும் ஸ்ரீ நிதீஸ்வரப்பெருமானை வழிபட்டுதிருவருள் பெற் றுள்ளனர். அதன் விபரங்களை பார்ப்போமா...??

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிக தேடலின் புதிய அடையாளம்!!

## பிரம்மா

அன்னவாகனன் என்றழைக்கப்படும் படைப்பு கடவுளான பிரம்மதேவரும், காக்கும் கடவுளான திருமாலும் ஈசனோடு போட்டியிட்டு, அவரது அடி முடியைத் தேடிச் சென்றனர்.

ஸ்ரீ ஹரியோ வராக உருவம் எடுத்து, பூமியை

ஆழத் தோண்டினார். சிவனது அடியை காணக் கிடைக்காமல் உண்மையை ஒப்புக்கொண்டு, சர்வேஸ்வரரிடம் பணிந்து நின்றார்.

அன்னப்பறவையாய் உருமாறிய பிரம்மதேவன், மகாதேவரது முடியை கண்டுவிட்டதாக பொய் கூறினார். இதனால் பெருங்கோபம் கொண்ட பரமேஸ்வரர் பிரம்மாவை அன்னப்பறவையாகவே இருக்கும்படி சபித்தார்.

விமோசனம் தேடிய பிரம்மா... இப்பூலகை அடைந்து, பொய்கை ஒன்றை உண்டாக்கி, அந்த நீரினால் இத்தலத்தின் சிவலிங்கத்தை அபிஷேகம் செய்து, பலகாலம் மகேசரை மனமுருகி வேண்டி நின்றார்.

மகிழ்ந்த ஈசர், ரிஷபாரூடராய் திருக்காட்சிதந்து, பிரம்மனது அன்ன உருவினை நீக்கி, அருள் புரிந்தார். மீண்டும் பிரம்மாவுக்கு உயிர்களைப் படைக்கும் உன்னதப் பணியை அளித்தார். பிரம்மா அன்னபறவை உருவில் இங்கு சிவபெருமானை வழிபட்ட காரணத்தால் இத்தலம் அன்னம்புத்தூர் என்று ஆனது.

## குபேரன்:

பதும நிதி, மகாபதும நிதி, மகா நிதி, கச்சப நிதி, முகுந்த நிதி, குந்த நிதி, நீல நிதி மற்றும் சங்க நிதி ஆகிய எட்டு வகையான நிதிகளுக்கும் தலைவன் குபேரன். இதனால் "நிதிபதி" என்றும் போற்றப்பட்டான். எட்டு திக்பாலர்களுல் ஒருவராக வும், வட திசைக்கு அதிபதியாகவும் திகழ்ந்தான் குபேரன்.

தனக்கு எப்போதும் அள்ள அள்ள குறையாத செல்வம் வேண்டியும், எக்காலத்திற்கும் தனாதிபதி யாக விளங்கிட வேண்டியும், இத்தல பெருமானை வழிபட்டு, நீங்காத செல்வம் நிலைபெற்றிருக்கும் வரத்தினை குபேரன் பெற்றதாக தல மகாத்மியம் எடுத்துரைக்கின்றது. இதனால் இப்பதி இறைவன் ஸ்ரீ நிதீஸ்வரர் என்றே அழைக்கப்படுகின்றார்.

## ஆலயம்:

ஊருக்கு மேற்கே ஆலயம் ஏரி யின் எதிரில் அமைந்துள்ளது. இராஜ கோபுரம் காணப்படவில்லை. கிழக்கு நோக்கியபடி சுவாமி சன்னிதியும், தெற்கு பார்த்தவாறு அம்பாள் சன்னிதியும் உயரமான மேடை மீது அமைந்துள்ளன. முழுவதும் கல் கட்டிடமாக வடிவமைக்கப்பட்டுள்து.

கருவறையுள் கிழக்கே முகம் கொண்டு ஒளிர்கின்றார் ஸ்ரீ நிதீ ஸ்வரர். பிரம்மனும், குபேரனும் வணங்கிய ஈசனை நாமும் வணங்கு கின்றோம் என்று நினைக்கும்போதே மெய் சிலிர்க்கின்றது. ஆலய மகா



மோ.கணேஷ்



மண்டபத்தில் வீற்றருளும் கணபதி கையில் பாடலிக் கொடியுடன் காட்சியளிக்கின்றார்.

பாடலிபுத்திரம் என்று அழைக் கப்பட்ட பாட்னாவில் இருந்து இந்த கணபதியின் சிலை கொண்டு வரப் பட்டு இங்கு ஸ்தாபிக்கப்பட்டுள் ளது.

தென்முகச் சன்னிதியில் நின்ற வண்ணம் திருவருள் புரிகின்றாள் ஸ்ரீ கனக திரிபுரசுந்தரி. உண்ணாமுலை அம்மன் போல் இரண்டுகரங்களை மட்டுமே கொண்டுள்ளால் இந்த நாயகி.

ஆலய வளாகத்துள்ளே தென் மேற்கு மூலையில் ஸ்ரீலட்சுமி கணபதியும், வடமேற்கில் வள்ளி தெய்வானையுடன் ஸ்ரீகல்யாண

e-magazine
aanmeegamalar.com

சுப்பிரமணியரும் தனித்தனியே சன்னதிகொண்டுள்ளனர். தென்புறம் தனியாக உள்ள சன்னிதியில் மிகப்பழமைவாய்ந்த துர்காதேவியின் சிலை நிறுவப்பட்டுள்ளது. முன்னே புதிய சிலையும் உள்ளது.

ஆன்மிகமலர்

கிழக்குப்புறத்தில் ஸ்ரீ பைரவருடன் ஸ்ரீ தனாகர்ஷண பைரவரும் வீற்றருள்கின்றனர்.

அமைதியான சூழலில் இயற்கை எழில் கொஞ்ச அமைந்துள்ளது. ஆலயத்தின் பின்புறம் பிரம்மதேவன் உண்டாக்கிய பிரம்மதீர்த்தம் அமைந்துள்ளது. தல விருட்சமாக கொன்றைமரம் திகழ்கிறது.

மாமன்னன் இராஜராஜ சோழன் தனது23–ஆம் ஆட்சியாண்டில், இக்கோவிலைக் கண்டு, வியந்து, வணங்கி, பல திருப்பணிகள் செய்து, நிவந்தங்கள் கொடுத்து, ஸ்ரீ நிதீஸ்வரப் பெருமானை வழிபட்டுள்ளதை இவ்வாலய சோழர்கால கல்வெட்டு உறுதி செய்கின்றது.

1000 ஆண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்த இவ்வாலயம், முற்றிலும் சிதிலமடைந்து மண்மேடாகி விட்டது. அதன் பின், தற்போது பக்தர்களின் முழு அர்ப்பணிப்பால், கற்கோவில் உருவாக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.



ஆன்மிகமலர்

## விசேடங்கள்:

நவராத்திரி உற்சவம் இங்கு வெகு சிறப்புடன் அனுசரிக்கப்படுகின்றது. அதில் சப்தமி மற்றும் அஷ்டமியில் சண்டி ஹோமமும், பத்தாம்நாள் பார்வேட்டையில் அம்பாள் திருவீதியுலாவும் விமர்சியாக நடத்தப்படுகின்றது.

பங்குனி பூசத்தில் வருஷாபிஷேகமும், அன்று மாலை திருக்கல்யாணம் உற்சவமும், சுவாமி அம்பாள் திருவீதியுலாவும் நடைபெறுகின்றன.

திருக்கல்யாணத்திற்கு பெருமாள் ஆலயத்திலிருந்து அம்பாளை வரிசை தட்டுடன் அழைத்து வரும் சம்பிரதாயமும், வாசலில் மாலை மாற்றும் வைபவமும் சிறப்புற நடைபெறுகின்றது. அதோடு, மாத பிரதோஷங்கள், சிவராத்திரி, அன்னாபிஷேகம், கார்த்திகை தீபம், கிரக பெயர்ச்சிகள் போன்ற அனேக விசேடங்களும் இங்கு பிரசித்தம்.

தினமும் காலை 7 மணி முதல் 12 மணி வரையும், மாலை 5 மணி முதல் 8 மணி வரையும் ஆலயம் திறந்திருக்கும். தினமும் இரண்டு கால பூஜைகள் நடைபெறுகின்றன.

## பரிகாரங்கள் :

- பௌர்ணமி மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அம்பாள் பாதத்தில் வெண்ணெய் வைத்து அர்ச்சனை செய்து, ஆலயத்தை மூன்று முறை வலம் வந்து, அந்த வெண்ணையைப் பெற்று தம்பதிகளாக சாப்பிட....குழந்தை பேறு கிடைப்பது உறுதி.
- கிருத்திகை, சஷ்டி மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் ஸ்ரீ நித்தியகல்யாண முருகருக்கு இரண்டு மாலைகள் சாற்றி வழிபட.... விரைவில் திருமணம் கைகூடும்.
- பெண்கள் பூப்படையாத குறை தீர ஐந்து வியாழக்கிழமைகளில் சுவாமிக்கு சொர்ணபுஷ்ப அர்ச்சனை செய்து, வெள்ளி நாணயத்தை பிரசாதமாகப் பெற்று செல்கின்றனர் பக்தர்கள். அதோடு இந்த பரிகாரத்தினால் நிலம் மற்றும் சொத்து சம்பந்தமான பிரச்சனைகளும் தீரும்.
- வெள்ளிக்கிழமை, பௌர்ணமி, பூச நட்சத்திரம், அக்ஷய திருதியை, தீபாவளி ஆகிய நாட்களில் சுவாமிக்கு ஸ்வர்ணபுஷ்ப அர்ச்சனை செய்து வழிபட....கடன் தொல்லைகளில் இருந்து விடுபடலாம். அதோடு மன அமைதி, வீடு வாகன யோகம், திருமண வரம், குழந்தை வரம், தொழில் அபிவிருத்தி, உத்தியோகம் ஆகியவற்றையும் பெற்றிடலாம்.
- குருவின் இரண்டு தெய்வங்களில் ஒருவரான பிரம்மா இங்கு வழிபட்டதால் குரு பெயர்ச்சி

e-magazine
aanmeegamalar.com

பரிகார பூஜைகள் இங்கு வெகு விமர்சையாக அனுசரிக்கப்படுகின்றன. அதில் பங்கு பெற்று பல நன்மைகளை அடைந்திடலாம்.

- ஸ்ரீ லட்சுமி கணபதியை சதுர்த்திகளில் வழிபட... கல்வி உயர்வும், குடும்பத்தில் லட்சுமி கடாட்சமும் பெருகும்.

7. மேற்குமுகமாக வீற்றருளும் ஸ்ரீகால பைரவரை ஆறு தேய்பிறை அஷ்டமி, இராகு காலங்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 8 நெய் தீபம் ஏற்றி செவ்வரளியால் அர்ச்சனை செய்து வழிபட... விரைவில் பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். தடைபட்ட அனைத்து காரியங்களும் நிறைவேறும். பில்லி, சூனியம், ஏவல் யாவும் அகலும்.
8. வளர்பிறை அஷ்டமி மற்றும் வெள்ளிக் கிழமைகளில் தன ஆகர்ஷண பைரவருக்கு எட்டு நெய் தீபம் ஏற்றி, செவ்வரளியால் அர்ச்சனை செய்து வழிபட... அனைத்து வகையான செல்வங்களும் கிடைக்க பெறும்.
9. ஒருவரது ஜாதகத்தில் பிரம்மஹத்தி தோஷம் மற்றும் குரு சாபத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஸ்ரீநிதீஸ்வரருக்கு வியாழக்கிழமையில் மஞ்சள் வஸ்திரம் சாற்றி, மஞ்சள் நிற பூக்களால் அர்ச்சித்து, ஐந்து நெய் தீபமேற்றி, ஐந்து முறை ஆலய வலம் வந்தால்....பூர்வ ஜென்ம பாவங்கள் நீங்க பெற்று, அவர்களின் விதி புதிதாக மாற்றி எழுதப்படுகிறது. அதோடு, அவர்களின் இல்லத்தில் நிலவும் வறுமையும் நீங்கி செல்வமும் மகிழ்ச்சியும் பெருகும் என்பது ஐதீகம்.

வழி: விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில்... திண்டிவனம் விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலையில் கூட்டேரிப்பட்டில் இருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் அன்னம்புத்தூர் அமைந்துள்ளது. டிரஸ்டி: 9444036534.

பழங்காமூர் மோ.கணேஷ்
தொடர்புக்கு: 9789156179

# காசியைவிட புண்ணியம் நிறைந்த ஸ்தலம், புண்ணியத்தை வளர்க்கும் ஒரே ஸ்தலம்

காசி தேசத்தில் வழிபட்டால் செய்த புண்ணியம் வளரும். அதே சமயம் நாம் செய்யும் தீய செயலுக்குண்டான பாவமும் வளரும் என்பார்கள். ஆனால் தமிழகத்தில் உள்ள ஸ்ரீ வாஞ்சியம் கோவிலுக்கு சென்றுவந்தால் புண்ணியம் மட்டுமே வளரும் என்பார்கள். இத்திருக்கோவிலில் ராகுவும், கேதுவும் ஒரே திருமேனியில் காட்சி தரும் தலமாக இத்தலம் அமைந்துள்ளது. பிள்ளைப் பேறு வேண்டுபவர்களுக்கு பலன் தரும் கோவிலாகவும் இது விளங்குகிறது.

ஏழரை, அஷ்டம மற்றும் கண்டகச் சனி திசைப் பரிகாரத் தலமாகும். இங்கு ஆயுஷ் ஹோமம், சஷ்டியப்த பூர்த்திகள் செய்ய நீண்ட ஆயுள் கிட்டும்.

இங்குள்ள குப்த கங்கையில் நீராடி பித்ரு காரியங்களைச் செய்தால் பித்ரு தோஷ நிவர்த்தி கிடைக்கும். ராகு கேதுவை வழிபட கால, சர்ப்ப தோஷம் நீங்கும்.

இத் தலத்தில் ஓர் இரவு தங்கினாலேயே செய்த பாவங்கள் அனைத்தும் தீர்ந்து முக்தி கிடைக்கும். ஸ்ரீயாகிய திருவை (மஹாலஷ்மி) பரந்தாமன் தனது வாஞ்சையில் விரும்பி சேர்த்ததால் இத் தலம் ஸ்ரீவாஞ்சியம் எனப் பெயர் பெற்றது.

இங்குள்ள குப்த கங்கையில் நீராடி இறைவனையும், அம்பாளையும், மஹா லக்ஷ்மியையும் வழிபட்டால் பிரிந்துள்ள தம்பதியர் பிணக்குகள் அனைத்தும் தீர்ந்து ஒன்று சேர்வர்.



# நொய்டா முருகன் கோவிலில் ‘வைகாசி விசாகம்’ ‘ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவா ஜெயந்தி விழா’ கோலாகலம்



வைகாசி விசாகம் நாள் மே–22ம் தேதி காலை 7.30 மணிக்கு காவடி, பால்குடம் செக்டர் 62 ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்தி கேயா கோவில் நிர்வாகம், முருக பக்தர்களுக்கு ஏற்பாடு செய்திருந் தது. மேலும், காலை 9 மணிக்கு ஸ்ரீ கார்த்திகேயருக்கு சிறப்பு அபி ஷேகமும், அதைத் தொடர்ந்து மகா தீபாராதனையும் நடைபெற்றது.

மாலையில் வெள்ளி கவசத் தால் ஸ்ரீ கார்த்திகேயருக்குஅலங்காரம் செய்யப்பட்டிருந்தது. இரண்டு நாள் வைகாசி விசாக திருவிழாவை யொட்டி, மே மாதம் 21ம் தேதி, செவ் வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு, ஸ்ரீ சுப்ரமணிய லட்சார்ச்சனை ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது.



எஸ்.வெங்கடேசன்

தென்னிந்தியாவில் அமைந்துள்ள ஆறுபடை வீடு முருகன் கோவில்களில் நடப்பது போலவே சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. ஸ்ரீ கார்த்திகேயருக்கு பல்வேறுமலர் களால் அலங்காரம் செய்யப்பட்டி ருந்தது.

சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட முரு கனை தரிசனம் செய்த பக்தர்கள், ‘முருகனுக்கு ஹரோ ஹரா’ என கோஷமிட்டனர். பக்தர்கள் ஸ்ரீ கந்த சஷ்டி, கந்தர் அனுபூதி, முருகன் கோஷம், ஸ்ரீ முருகப் பெருமானைப் பற்றிப் பல்வேறு பாடல்களை பாடிய வாறு காணப்பட்டனர். மஹா தீபா ராதனையுடன் இரண்டு நாள் விழா

e-magazine
aanmeegamalar.com









நிறைவடைந்து, அனைவருக்கும் மகா பிரசாதம் வழங்கப்பட்டது.

அனைத்து பூஜைகளும் விபிஎஸ்சின் ஆஸ்தான வாத்தியார் ஸ்ரீ சங்கர் அவர்களின் வழி காட்டுதலோடு, கோவில் வாத்தியார்கள்: ஸ்ரீ மணிகண்டன் சர்மா

மற்றும் வைபவ் மிஸ்ரா ஆகியோரின் உதவியுடன் சிறப்பாக நடைபெற்றது. இரண்டு நாட்கள் நடந்த விழாக்களில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு, கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல், கோவிலுக்குச் சென்று, முருகன் அருள் பெற்றனர்.

## நொய்டா கோவிலில் ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவா 131-வது ஜெயந்தி விழா

அனுஷத்தில் அவதரித்த அற்புதர் ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவா ஜெயந்தியை முன்னிட்டு, ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவில், செக்டார் 62, நொய்டாவில், சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு, பின்னர் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டார். மேலும், தொடர்ந்து மாதந்தோறும் அனுஷம் நட்சத்திர பூஜையும் நடந்தது. இந்த அனுஷம் நட்சத்திர பூஜை கடந்த ஐந்தாண்டுகளாக ஒவ்வொரு மாதமும் தடையின்றி நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. சிறப்பு வேதபாராயணம் (ரிக் வேதம், யஜுர் வேதம், சுக்ல யஜுர் வேதம்) ஸ்ரீ ரவி சர்மா, கோவில் வாத்தியார்கள்: மணிகண்டன் சர்மா, மோஹித் மிஸ்ரா மற்றும் அர்ஜுன், ஆகியோர் வழங்கினர். மகா தீபாராதனையுடன் பூஜைகள் நிறைவடைந்து, அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370

## சங்கடங்கள் தீர்க்கும் பிரத்தியங்கரா, சரபேஸ்வரர்

கடன் தொல்லைகளில் இருந்து விடுபட, வழக்குகளில் வெற்றியடைய, பில்லி,சூனியம், ஏவல்களில் இருந்து விடுபட பரமேஸ்வரன், சரபேஸ்வரராய் வீற்றிருந்து அருள்பாளிக்கும் "திருபுவனம் சூலினி, பிரத்தியங்கரா சமேத சரபேஸ்வரர்" கோவிலுக்கு சென்று வழிபடலாம்.

இவர் வழிபடுபவரின் அனைத்துசங்கடங்களையும் தீர்ப்பவர். சூலினி, பிரத்தியங்கரா என தன் இரு தேவியருடன் தனி சந்நதி கொண்டு வீற்றிருக்கும் சரபரை 11 விளக்குகள் ஏற்றி, 11 முறை சுற்றி வந்து, 11 வாரங்கள் வழிபட சங்கடங்கள் அனைத்தும் தீர்ந்து சுக வாழ்வு கிடைக்கும். சரபரை வழிபட ஞாயிற்று கிழமை ராகு கால நேரம் சிறந்தது.



# ஆன்மிக சேவையை பாராட்டலாம் வாங்க...

**பஜன்மண்டலியினர்,**

**ஆன்மிக சேவை செய்யும் அன்பர்கள்,**

**ஆன்மிக அமைப்புகள், உழவாரப்பணி,**

**கோவில் திருவிழாக்களில் சேவையாற்றும் அன்பர்கள்,**

**அன்னதானம் செய்பவர்கள்,**

**பல்வேறு ஆன்மிகபணி செய்யும் ஆன்மிக அன்பர்கள்**

மேற்கண்ட ஆன்மிக பணியை விரும்பி செய்யும் அன்பர்கள் தங்களைப் பற்றியும், தங்களது சேவையைப் பற்றியும் எங்களுக்கு தெரியப்படுத்தவும், தாங்கள் செய்யும் சேவையை புகைப்படத்துடன் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவோம், உங்களுடன் இணைந்து பணிசெய்ய விரும்பும் அன்பர்களுக்கு நமது ஆன்மிகமலர்.காம் இணையதளமும், இணையதள இதழும் பாலமாக செயல்படும், கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு தெரியப்படுத்தவும், அல்லது தொடர்பு கொள்ளவும்.

**வாட்சப் எண்: 9444228203**

# என்னை எண்ணாமல் கஷ்டத்தை எண்ணாதே


e-magazine
aanmeegamalar.com

சீடன்: இயக்கம் எப்பொழுது துவங்குகிறது?
ஞானி: மனம் சிந்தனையோடு சேரும்போது.
சீடன்: மநதிரம் எப்பொழுது செயல்படுகிறது?
ஞானி: பராக்கிரமத்துடன் சொல்லும்போது.
சீடன்: சக்தி எப்பொழுது பிறக்கிறது?
ஞானி: விஷயத்தை ஈர்த்துக் கொள்ளும்போது.
சீடன்: பக்தி எப்பொழுது உருவாகிறது?
ஞானி: புத்தி பஞ்சுபோல் இருக்கும்போது.
சீடன்: சிந்தனை எப்பொழுது வரக்கூடாது?
ஞானி: பொறுப்புகள் உள்ள காலத்தில்.
சீடன்: தெய்வீகம் எப்பொழுது சிறக்கிறது?
ஞானி: மனதை அன்பால் ஆடி உழும்போது.
சீடன்: பொய் எப்பொழுது பேசப்படுகிறது?
ஞானி: அறிவுக்கு புலப்படாததை பேசும்போது.
சீடன்: மதம் எப்பொழுது பிறக்கிறது?
ஞானி: சிலரின் அனுபவங்கள் ஒன்றாகும்போது.
சீடன்: சமுதாய வளர்ச்சி எப்பொழுது ஏற்படுகிறது?
ஞானி: அனைவரின் உயிரும் ஒன்றாக நோக்கப்படும்போது.
சீடன்: கடவுள் இருக்கிறான் என்று எப்பொழுது தோன்றுகிறது?
ஞானி: சரணாகதி அடையும்போது.
சீடன்: மனிதன் எதைக் கண்டு பயப்படுகிறான்?
ஞானி: மரணத்தைக் கண்டு.
சீடன்: மனிதனுக்கும் மரணத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?
ஞானி: சந்தேகம் உள்ள மனிதன் அடிக்கடி இறக்கிறான். அறிவில்லாத மனிதன் என்றோ இறந்துவிட்டான். ஞானமுள்ள மனிதன் மரண பயம் அடைவதில்லை.
சீடன்: கடவுளிடம் வெறுப்பு கொள்ளலாமா?
ஞானி: கடவுளிடம் கொண்ட வெறுப்பு உண்மையாக இருந்தால் உயர்வு. உதாரணம் கம்சன்.
சீடன்: அனுபவம் மிக அவசியமா?
ஞானி: ஆமாம். சுவைபட படிக்கலாம். கேட்கலாம். ஆனால் அனுபவித்தவர்கள் கம்மி. அதற்கு குருவின் அனுக்கிரகம் தேவை.
சீடன்: பக்தி எப்பொழுது வருகிறது?
ஞானி: ஞானத்தின் லட்சணம் என்ன என்று விசாரித்தால் தான் பக்தி வடிவம் வரும்.
சீடன்: கடவள் மனிதனிடம் வருவது எப்பொழுது?
ஞானி: மனிதனின் ஒன்பது வாசல்படி வழி கடவுள் வருவதில்லை. மன வாசல்படி திறந்திருந்தால்தான் கடவுள் வருவான்.
சீடன்: குசேலனுக்கு கண்ணன் உதவியது ஏன்?
ஞானி: குசேலனின் அஞ்ஞானம் அவன் ஏழ்மையைப் பற்றிய எண்ணம் அதில் அவன் வெட்கப்படாததால் கண்ணன் உதவினான்.



சீடன்: கண்ணனின் உபதேசம் என்ன?
ஞானி: என்னை எண்ணாமல் கஷ்டத்தை எண்ணாதே என்பதே.
சீடன்: தியானம் என்றால் என்ன?
ஞானி: கவனிப்பு என்பதுதான் தியானம். மனிதன் அனைத்தையும் கவனிப்பதில் கேட்கிறான். அறிகிறான்.
சீடன்: உபதேசங்கள் எதற்கு?
ஞானி: கடவுளை நேசிப்பதற்கு.

e-magazine
aanmeegamalar.com



ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

**ஆசிரியர் குழுவில் இணையலாம்**

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

சீடன்: துன்பம் எப்பொழுது தெரிகிறது?
ஞானி: கடவுளின் நிழல் கிடைக்காதபொழுது..
சீடன்: பக்தன் ஆவது எப்பொழுது?
ஞானி: நம்மை நாமே சோதித்துக் கொள்ளும்போது.
சீடன்: வர்க்கங்கள் தோன்றியது எப்பொழுது?
ஞானி: பாசம் நம் அறிவை தடுக்கும்போது.
சீடன்: கடவுள் மகிழ்வது எப்பொழுது?
ஞானி: மனிதனுக்கு மனிதன் தொண்டு செய்யும்போது.
சீடன்: திருவிழாக்கள் எதற்கு உபயோகம்?
ஞானி: மனிதனின் கவலையை நீக்க ஒரு வாய்ப்பு பக்தர்கள் வாழ்வு முழுதும் கொண்டாட்ட திருவிழாதான்.
சீடன்: கொண்டாட்டங்களை எப்படி அணுகுவது?
ஞானி: அடுத்தவர்களுடன் பகிர்ந்து கொள். அதுவே தவமாகிறது.
சீடன்: குரு எப்படிப்பட்டவர்?
ஞானி: கபடு, சூது இல்லாதவன்தான் குருவாக முடியும்.
சீடன்: முழுமை என்பது பக்தி மார்க்கத்தில் எப்படி?
ஞானி: தத்துவத்தின் வழி கடவுளை எண்ணி தத்துவத்தின் வழி சிந்தனையில் நுழைந்து அதிலிருந்தும் வெளிவந்த நிலை.
சீடன்: ஆயிரம் தெய்வங்கள் உள்ளனவே?
ஞானி: அதுவே மனிதனின் வலிமை.
சீடன்: கடவுள் மனிதனுக்கு அளித்த வரங்கள் எவை?
ஞானி: (சிரித்தபடி) தூக்கமும், விழிப்பும்.
சீடன்: மனிதன் என்பவன் யார்?
ஞானி: உன் குற்றங்களை சுட்டிக் காட்டுபவன்.
சீடன்: குரு என்பவர் யார்?
ஞானி: மறுமுறை அக்குற்றம் செய்யமாலிருக்க வழி காட்டுபவன்.
சீடன்: சங்கம் என்பது என்ன?
ஞானி: மனிதனின் உள்ளம்.
சீடன்: மதம் என்பது என்ன?
ஞானி: வித்தியாசமாக சிந்திக்கும் தன்மை.
சீடன்: தொண்டன் என்பவன் யார்?
ஞானி: தொண்டு செய்தால் அழிந்து விடுவோம் என்று தெரிந்தும் தொண்டு செய்பவன்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

அழகுராஜா

# ஐதராபாத்தில் திருப்பதிக்கு நிகரான

# ஸ்ரீ வேங்கடேசுவர சுவாமி திருக்கோவில்

e-magazine
aanmeegamalar.com

தெலுங்கானாவின் தலைநகரமான ஐதராபாத்தில், ஜுப்ளி மலையில், ரோட் நெ 92 ல் புதிதாக திருமலை திருப்பதி தேவஸ்தானத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது "ஸ்ரீ வேங்கடேசுவர சுவாமி திருக்கோவில்". இது ஐதராபாத்தில் அமையப் பெற்ற இரண்டாவது தேவஸ்தானக் கோவில். நகரின் மையப்பகுதியில், ஹிமயத் நகரில், திருமலை திருப்பதி தேவஸ்தான தகவல் மையத்தில் உள்ள "ஸ்ரீ வேங்கடேசுவர சுவாமி திருக்கோவில்" மிகப் பிரசித்தி பெற்ற முதல் கோவில் ஆகும்.

ஜுப்ளி மலையில் ஒரு சிறிய குன்றின் மேல் சுமார் 45 அடி உயரத்தில் அமைந்துள்ள புதிய திருக்கோவிலின் சம்ரோஷணம் வைகாசன ஆகம முறைப்படி மார்ச் மாதம் 13 ந் தேதி 2019 ல் மிக விமர்சையாக நடைப்பெற்றது. அரசாங்கத்திடம் இருந்து பெறப்பட்ட3.5 ஏக்கர் நிலத்தில், ஆகஸ்ட்10 ம் தேதி 2016 பூமிப்பூஜை தொடங்கப்பட்டு திருக்கோவில் பணி 2019 ல் பூர்த்தி அடைந்தது. தமிழ்நாட்டில் உள்ள நாமக்கல்லிருந்து கொண்டு வரப்பட்ட கருப்பு நிற கிரானைட் கல்லில் 5.5 அடி உயர மூலவர் திருமேனி வடிவமைக்கப்பட்டதாம். நிலத்திலிருந்து 45 அடி உயரம் உள்ள மலைக்கோவிலை அடைய அகலமான படிக்கட்டுக்களும், வாகனத்தில் செல்ல தனிவழி சாலையும், கார் பார்க்கிங் வசதியும் உள்ளது. அலங்கார தோரண முகப்பு வாயிலை கடந்து, படிகளில் ஏறிச் செல்லும் போது, சங்கு, சக்கரத்துடன் கூடிய திருமண்காப்பும், அழகிய ராஜ கோபுர தரிசனமும் கிடைக்கிறது.



வெளிப்பிராகாரத்தில் தனி சன்னதி கொண்டு அருளும் ஸ்ரீமகா கணபதியை தரிசித்து, பின் நெடிதுயர்ந்த ராஜ கோபுரம் கடந்து உள்ளே நுழைகிறோம்.

பளபளக்கும் துவஜ ஸ்தம்பம், பலிப்பீடம். வருடப்பிறப்பை முன்னிட்டு அழகான மலர் அலங்காரம், வண்ண வண்ண கோலங்கள், விதானத்திலிருந்து தொங்கும் காய் கனி அலங்காரம் என கோவில் அழகுற மிளிர்கிறது.

பெரிய திருவடியாம் ஸ்ரீகருடரை சேவித்து, ஜெய, விஜய துவார பாலகர்களை வணங்கி, மூலஸ்தானத்தில் சர்வ அலங்காரத்துடன், ஜகஜோதியாக அருளும் திருவேங்கடவரை தரிசிக்கும் போது நம் மெய் சிலிர்க்கிறது. கண்கள் பனிக்கிறது. அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனின் ஏகாந்தமான சேவை. ஜருகண்டி கிடையாது.

வைகுண்டத்திலிருந்து பக்தர்களுக்காக பூலோகம் இறங்கி வந்த திருமலையப்பன், தற்போது பக்தர்களுக்காக ஐதராபாத்தில் திருக்கோவில் கொண்டுள்ளார் என்பது தான் உண்மை. ஆர்த்தி, தீர்த்த பிரசாதம் பெற்றுக் கொண்டு, சடாரியும் சாதித்துக் கொண்டு, பக்கவாட்டில் உள்ள ஸ்ரீவாரி உண்டியலில் காணிக்கைகளை சமர்ப்பித்து, வெளியில் வந்தால், விஸ்தாரணமான உட்பிராகாரம். வலம் வந்து பிரசாதம் பெற்றுக் கொண்டு, அமர்ந்து உண்ண விசாலமான இடமும், சுத்தமான குடிநீர் வசதியும் உள்ளது. அமைதியாக அமர்ந்து பகவான் நாமம் சொல்லலாம்.

கோவிலின் உள்ளே நவீன முறையில் அமைக்கப்பட்ட மடைப்பள்ளி உள்ளது. திருமலையில் அளிக்கப்படும் லட்டு பிராசாதம் போல இங்கும் தயார் செய்து பக்தர்களுக்கு அளிக்க உள்ளார்கள். திருமலையில் நடைபெறும் அனைத்து ஆர்ஜித சேவைகளும் இங்கும் நடைபெற உள்ளது. திருமலைப் போல "ஸ்ரீசுவாமி புஷ்கரணி" திருக்குளம் உள்ளது அர்ச்சகர்களுக்கு தனி இருப்பிடம் அமைக்கவும் உள்ளார்கள்.

இத்திருக்கோவிலின் சிறப்பம்சம் ஸ்ரீதிருவேங்கடவன் லஷ்மி தேவியை தன் இதயத்தில் இருத்தி, திருவாழ் மார்பனாக, திருமலை ஸ்ரீநிவாசராக அருளுகிறார். ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுக்கு தனி சன்னதி உள்ளது. மலை ஏறும் முன் மகா கணபதியை வழிபடுவது போல, இங்கு மகா கணபதிக்கு சன்னதி உள்ளது.

இத்திருக்கோவிலில் தரிசனம் காலை 5 மணிக்கு சுப்ரபாத சேவையில் தொடங்கி, இரவு 9 மணி ஏகாந்த சேவை வரை உள்ளது. மதியம் 2 மணி முதல் 4 மணி வரை கோவில் நடை மூடப்படும். காலை 9 மணி முதல் 2 மணி வரை, மாலை 4 முதல் 6 வரை, இரவு 7 முதல் 8 வரை சர்வ தரிசனம். தினம் காலை தோமாலை சேவை, அஷ்டோத்திர அர்ச்சனை, ஸ்ரீவாரி அபிஷேகம், சகஸ்ரநாம அர்ச்சனை, சாத்துமுறையும், மாலை அஷ்டோத்திர அர்ச்சனையும், இரவு ஏகாந்த சேவையும் நடக்கிறது. ஐதராபாத் வரும் அன்பர்கள் இத்திருக்கோவிலை தரிசித்து, ஸ்ரீவேங்கடவரின் அருளைப் பெற்றுச் செல்லுங்கள் !!!

ஆர்.சுபத்ரா ரங்கநாதன்
Hyderabad-500 036.
Telengana



e-magazine
aanmeegamalar.com

FREE

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# 170 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை

பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...



eBook FREEDOWNLOAD

**aanmeegamalar.com**



தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# ஆன்மீக வழியில் அமைதி



மனிதனின் கர்மாக்கள் அனைத்தும் ஜடமானவை. கடவுள் என்பவர் யாருக்கும் புரியாத அறிவுத் தத்துவம், ஞானதத்துவம். அவரே நம் அனைவருக்கும் பாவ புண்ணியக் கர்மாக்களின்படி நமது வாழ்க்கைக்கு வழி காட்டுபவர். அதாவது ஜடமான கர்மாக்களுக்கு பாவ புண்ணியங்களை வகுத்து வழி காட்டுபவர் என்று சாஸ்திரம் கூறுகிறது. பொதுவாக நமது துன்பங்களுக்கு துயரங்களுக்குக் காரணம் இன்னதென்று அறிந்து மனிதன் செயல்பட்டாலே அவன் மனதில் உள்ள பாதி துன்பம் குறைந்து விடும்.

கர்மா தத்துவம் என்ன கூறுகிறது என்றால் மனிதன் அறிந்தோ அறியாமல் செய்த பாவங்களுக்குத் தண்டனையை அல்லது துன்பத்தை அவன் அனுபவிக்கிறான். மனிதர்கள் துன்பங்கள் துயரங்களை அனுபவிக்கும்போது அவை நமக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை என்று நினைக்காமல் அது நம்மை நல்வழிக்கு நடத்திச் செல்வதற்கு வழிகாட்டும் பிராயச்சித்தம் அல்லது சத்தியசோதனை என்று நினைக்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

நாம் உலகில் வாழும்போது மனம், வாக்கு, செயல் மூன்றிலும் தூய்மையுடன் வாழ்ந்தால் நமது எதிர்காலத்தில் கர்மா தத்துவப்படி புண்ணியத்தின் பலன்களை அடையலாம் என்று கர்மா தத்துவம் கூறுகிறது. கடந்த காலத்தில் உள்ள பாவ புண்ணியப் பலன்களை நிகழ் காலத்திலும், நிகழ்காலப் பாவ புண்ணியப் பலன்களை எதிர்காலத்திலும் பெறலாம் என்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது எதிர்கால பாவ புண்ணிய கர்மா பலன்களை நாம் செய்யக்கூடிய கர்மவினைகளின் மூலம் அனுபவவிக்கிறோம்.

சிலபேர் மனம், வாக்கு, செயல்பாடுகள் மூலம் அதர்ம வழியில் சென்றாலும் அவர்கள் வசதியாகவும் துன்பமில்லாமல் இன்பமாக வாழ்கிறான் என்பதையும், அதேபோன்று தர்ம வழியில் சென்றவன் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவவிக்கிறான் என்பதையும் நாம் உலகில் பார்க்கிறோம். இவற்றையெல்லாம் கண்ணுற்ற மற்ற மனிதர்களும் அவனையும் அறியாமல் அவனுடைய மனம் தவறான முடிவுக்கு வந்து விடுகிறது. அதாவது அதர்ம வழியில் சென்றால் நாமும் இன்பமாக வசதியாக

78



e-magazine aanmeegamalar.com

வாழலாம் என்று தவறாக எண்ணிக்கொண்டு அதர்ம வழியில் இறங்கி விடுகிறான். இது தவறான முடிவாகும் என்பதை அவன் உணர்வதில்லை.

இதற்கு இந்த கர்ம தத்துவம் என்ன கூறுகிறது என்றால் அதர்ம வழியில் சென்று கொண்டிருக்கும் ஒருவன் நன்றாக வசதியாக இன்பமாக வாழ்கிறான் என்றால் அவன் போன பிறவியிலோ அல்லது இந்த ஜென்மத்திலோ அவன் செய்த புண்ணிய கர்மாவினால் வாழ்வில் வசதியாகவும் இன்பத்தை சுகமாகவும் அனுபவவிக்கிறான். அவன் எதுவரையில் அவ்வாறு இன்பங்களையும், சுகத்தையும் அனுபவவிக்கிறான் என்றால் அவனது புண்ணிய கர்மப்பலன்கள் தீரும்வரையில் இன்பமாக வாழ்ந்து கொண்டிருப்பான். அதன் பிறகு அவன் இப்போது செய்யும் செய்து கொண்டிருக்கும் அதர்மங்களுக்கு அவன் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவவிப்பான் என்று கர்ம தத்துவம் கூறுகிறது.

அதேபோல் மனம், வாக்கு, செயல் மூன்றிலும் தர்மவழியில் நடப்பவன் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவவிக்கிறான் என்றால், அவன் போன பிறவியிலோ அல்லது இந்த பிறவி யிலோ அவன் அறிந்தும் அறியாமல் செய்த பாவ கர்மாவினால் துன்பங்களை அனுபவவிக்கிறான். அவன் எதுவரையில் அவ்வாறு துன்பங்களை துயரங்களை அனுபவவிப்பான் என்றால் அவனது பாவ கர்மப்பலன்கள் எல்லாம் தீரும்வரையில் துன்பங்களுடன் துயரங்களுடன் வாழ்வான். அவனது பாவ கர்ம பலன்கள் அனைத்தும் தீர்ந்த பின்பு அவன் இப்போது செய்யும் செய்து கொண்டிருக்கும் தான தர்மங்களுக்கு ஏற்றவாறு அவன் வாழ்வில் இன்பத்தை சுகமாக அனுபவவித்து வசதியாக வாழ்வான் என்று கர்ம தத்துவம் கூறுகிறது.

நாம் கர்மா தத்துவத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டால், நமது துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் மற்றவர்களையோ, நம்மைப் படைத்த கடவுளையோ குற்றம் கூறத் தோன்றாது. நமது இன்ப துன்பங்களுக்கு நாமே பொறுப்பு என்ற விழிப்புணர்வு வரும்போது நமது மனம் இயல்பாக பக்குவப்பட்டு மன அமைதி அடையும். பொதுவாக உலக வழக்கில் துன்பங்கள், துயரங்கள் வரும்போது, எல்லாம் நம் தலையெழுத்து என்று கூறிக்கொண்டு இருப்போம். அவ்வாறு கூறினாலும் பாவ புண்ணிய கர்மப் பலன்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு முடியாது. நமது இன்ப துன்பங்களுக்கு நாம் செய்த கர்மவினைகள்தான் காரணம் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

கர்மா வினைகள் சஞ்சிதா கர்மா, ஆகாமி கர்மா, பிரார்த்த கர்மா என்று மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது. ஜீவன்கள் இவ்வுலகில் வாழும்போது அவன் வாழும் காலத்தில் புதிதாக சேரக்கூடிய பாவ புண்ணிய கர்மாக்களுக்கு ஆகாமி கர்மா பலன்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது. இது முற்றும் துறந்த ஞானிக்கும், உலக வாழ்வில் ஈடுபட்டிருக்கும் அஞ்ஞானிக்கும் பொருந்தும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஒரு ஞானி அவர் ஞானநிலை அடைவதற்கு முன்பாக அஞ்ஞானியாக வாழ்ந்திருக்கலாம். அப்போது அவர் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்றவாறு கர்ம பலன்களை இன்ப துன்பங்களை ஞானநிலை அடைந்தபிறகும் அனுபவவிக்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. எடுத்துக்காட்டாக ஒருவர் நாற்பது வயதுக்குப் பிறகு ஞானம் பெற்று ஞானியாகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் முப்பத்தொன்பது வயது வரை அஞ் ஞானியாக வாழ்ந்தபோது அறிந்தும் அறியாமல் செய்த பாவ புண்ணிய கர்மாக்களுக்கு அவர் இன்ப துன்பங்களை அனுபவவிக்க வேண்டும். அவர் அவ்வாறு அனுபவவிக்கும் கர்மா பலன்களுக்கு ஆகாமி கர்மா என்று சாஸ்திரம் கூறுகிறது.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

அஞ்ஞானிகள் ஆசை, கோபம் பொறாமை, மோகம், போன்றவற்றினால் தூண்டப்பட்டு அவனையும் அறியாமல் பாவங்களை செய்து அதனால் அவர்கள் கர்ம பலன்களை அனுபவவிப்பார்கள். முற்றும் துறந்த ஞானிகள் அவ்வாறு இருப்பதில்லை. ஞானம் அடைந்தபின் ஞானிக்கு அஞ்

e-magazine
aanmeegamalar.com

ஞானிக்கு உள்ளதுபோல் உலக ஆசை, கோபம் பொறாமை, மோகம், போன்றவை இருப்பதில்லை. ஆனால் ஞானியர்கள் உடலளவில் அவர்களையும் அறியாமல் செய்யக்கூடிய பாவங்கள் அதாவது அவர் நடந்து செல்லும்போது அவர் அறியாமல் காலில் மிதிபடும் உயிரினங்கள், அவர் மூச்சு விடும்போது கண்ணுக்குத் தெரியாத உயிரினங்களுக்கு ஏற்படக்கூடிய துன்பங்கள் போன்றவை முற்றும் துறந்த ஞானிகளுக்கு பாவப்பலன்களாக ஏற்படுவதுண்டு என்று சாஸ்திரம் கூறுகிறது.

நாம் உலக வாழ்வில் ஏதாவது ஒரு காரணத்தால் உணர்ச்சி மிகுதியில் மற்றவர்களின் மனம் புண்படும்படி பேசி செயல்பட்டிருப்போம். இதேபோன்று முற்றும் துறந்த ஞானியர்களுக்கும் ஆகாமி கர்மா பலன்கள் உண்டு. அதாவது ஞானியர்களும் பாவ புண்ணிய கர்மப்பலன்கள் மூலம் வரக்கூடிய இன்ப துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஒவ்வொரு ஜீவனிடத்திலும் ஏற்கனவே உள்ள பாவ புண்ணியங்களின் குவியல்தான் சஞ்சிதா கர்மா என்று கூறப்படுகிறது. இது அஞ்ஞானிகள் முற்றும் துறந்த ஞானிகளுக்கும் சஞ்சிதா கர்மா பலன்கள் உண்டு. இந்த சஞ்சிதா கர்மா பலன்கள் எல்லாம் காரண சரீரத்தில் பதிவாகி விடுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. இந்த சஞ்சிதா கர்மா பிரளயத்தில்கூட அழிவதில்லையென்றும். பிரளயம் முடிந்து பிரபஞ்சம் உண்டாகும்போது மீண்டும் ஜீவன்கள் பிறக்கும்போது அவனுடைய பாவ புண்ணியப் பலன்களுக்கு ஏற்ப ஜன்மம் ஏற்பட்டு பாவ புண்ணியப் பலன்களை தொடர்ந்து அனுபவிக்கிறது என்று சாஸ்திரம் கூறுகிறது.

சஞ்சிதா கர்மா என்பது அனைத்து ஜென்மங்களுக்கும் ஏற்படக்கூடிய பாவ புண்ணிய கர்மா பலன்கள் ஆகும். மனித ஜென்மத்தில் அனுபவிக்கும் பாவ புண்ணியப் பலன்கள் சஞ்சிதா கர்மா என்று சாஸ்திரம் கூறுகிறது. மனிதனுக்கு எதனடிப்படையில் ஜன்மம் கிடைக்கிறது என்றால் சஞ்சிதா கர்மாவின் அடிப்படை யில்தான் கிடைக்கும். அதாவது ஒரு



ஜீவன் அதிக புண்ணியம் செய்திருந்தால் மனிதனாகப் பிறந்து வசதியாக இன்பங்களை அனுபவவித்து சுகமாக வாழ்வான்.

அதேபோன்று அவன் பாவங்கள் அதிகம் செய்திருந்தால் துன்பப்படுவான் என்று சாஸ்திரம் கூறுகிறது. மனிதன் அதிகமான பாவ கர்மாக்களில் ஈடுபட்டிருந்தால் அவன் மிக அதிகமாக துன்பப்படுவான். அதிகமான புண்ணியக் கர்மாக்களில் ஈடுபட்டிருந்தால் அதிகமாக இன்பங்களை அனுபவவிப்பான். அதாவது மனிதன் அதிகமான புண்ணிய கர்மாக்களில் ஈடுபட்டிருந்தால் குறைவான துன்பங்களை மட்டும் அனுபவவிப்பான் என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ள வேண்டும். மனிதர்களுக்கு புண்ணிய கர்மாக்கள்தான் அவன் விரும்பும் தேடும் மன அமைதியைக் கொடுக்கும் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com



FREE
ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
176 e-books
1000–க்கணக்கான
ஆன்மிக செய்திகள்
முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை
பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...
eBook
FREE DOWNLOAD
யாகத்தால் மழை வருமா?
முட்டாள்தனமான கேள்விக்கு
அறிவியல் ரீதியான விளக்கம்
aanmeegamalar.com
தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com